பக்கங்கள்: 12 விலை : 30/-

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 தை 06 செவ்வாய்க்கிழமை 19.01.2021 கதிர் 75

**இனி இது இரகசியம் அல்ல!**

தென்னிலங்கையில் கொரோனாத் திருக்கூத்துப் பெரும் கூத்தாக இருக்கின்றது.

கொரோனாத் தடுப்பு மருந்து என்ற பெயரில் தம்பிக்க பரியாரியார் கண்டு பிடித்த பாணிக்காக வக்காலத்து வாங்கிய பிரமுகர்களே கொரோனா பக்கம்02 »

# அரசின் பௌத்த மயமாக்கல் தீவிரம் குருந்தூர் மலையில் குந்தினார் புத்தர்

## பிடுங்கி எறியப்பட்டது ஐயனார் சூலம்



முல்லைத்தீவு, ஜனவரி 19

தமிழ் மக்களுக்குச் சொந்தமான புராதன ஆதி சிவன் ஐயனார் ஆலயம் அமைந்துள்ள வயல் நிலங்கள் காணிகள், உள்ளடங்கிய முல்லைத்தீவு மாவட்டத்தின் குருந்தூர் மலையில் புராதன பௌத்த விகாரைகள் இருந்தமைக்கான தொல்லியல் சிதைவுகள் காணப்படுகின்றன என்று தெரிவித்து இராணுவத்தின் அனுசரணையுடன் தொல்லியல் திணைக்களத்தால் அகழ்வு ஆராய்ச்சிப் பணிகள் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. பக்கம் 02 »

## யாழ் ரயிலில் வந்தவருக்கு கொரோனாத் தொற்றுதி

(கி.வசந்தரூபன்)

வவுனியா, ஜன.19

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி ரயிலில் பயணித்த நபர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக வவுனியா சுகாதாரத் துறையினர் தெரிவித்தனர்.

கொழும்பில் இருந்து யாழ் நோக்கி சென்ற ரயிலில் வருகை தந்த வவுனியாவைச் சேர்ந்தவர்களிடம் வவுனியா ரயில் நிலையத்தில் வைத்து சுகாதார துறையினர் அன்டிஜன் பரிசோதனை மேற்கொண்டனர்.

இதன்போது புத்தளம் பகுதியில் இருந்து பக்கம் 11 »

## வீறாப்புப் பேசிய அமைச்சர் பவித்ரா உடனடியாகப் பதவி விலகவேண்டும்

### சஜித் அணி வலியுறுத்து



கொரோனாத் தொற்றால் உயிரிழப்பவர்கள் தொடர்பில் நாடாளுமன்றத்தில் கேள்வியெழுப்பியபோது உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் இறந்தவர்களைக் குறைந்தளவானோரே கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர் என்று அரசு பதிலளித்தது. ஆனால், தற்போது கொரோனா மரணங்களின் எண்ணிக்கை 260 ஐக் கடந்துள்ளதால் சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி பக்கம் 11 »



## சகல இலங்கையர்களுக்கும் கட்டாய இராணுவப் பயிற்சி!

### கோட்டா அரசு யோசனை

18வயதுக்குமேற்பட்ட அனைத்து இலங்கைக் குடிமக்களுக்கும் கட்டாய இராணுவப் பயிற்சி வழங்குவதற்கான திட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளோம்.

– இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

இந்த முன்மொழிவை எண்ணி எவரும் அச்சமடையத் தேவையில்லை என்றும், பக்கம் 02 »

## 270 ஆக அதிகரித்தது 'கொரோனா' மரணம்!

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 270ஆக அதிகரித்துள்ளது.

அரச தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் பிரகாரம், இறுதியாக இலங்கையில 6 உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ளன.

கொழும்பு 03, கொழும்பு 15, முகத்துவாரம், களுத்துறை, தெஹிவளை மற்றும் இரத்தினபுரி ஆகிய பகுதிகளிலேயே இந்த உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ளன.

இவ்வாறு பக்கம் 02 »

## நேற்றும் 346 பேருக்குக் 'கொரோனா' மொத்தப் பாதிப்பு 53,408 ஆக உயர்வு

இலங்கையில் நேற்றும் 346 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன்படி நாட்டில் மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 53 ஆயிரத்து 408 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 49 ஆயிரத்து 620 பேருக்கு கொரோனாவின் மூன்றாவது அலை மூலம் வைரஸ் தொற்றியுள்ளது.

மொத்தத் தொற்றாளர்களில் 45 ஆயிரத்து 820 பேர் குணமடைந்துள்ளனர் எனவும், 7 ஆயிரத்து 318 பேர் பக்கம் 02 »

## துறைசார் நிபுணர்களை ஒன்றிணைத்து பொதுப்பட்டியலில் தேர்தலில் போட்டி?

வடமாகாண சபைத் தேர்தலில் துறைசார் நிபுணர்களை உள்ளடக்கிய பொதுப்பட்டியலில் போட்டியிடுவது குறித்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துடன் ஆலோசனை நடத்தியுள்ளார் என்று கூறப்படுகிறது.

வடமாகாண சபைக்கான தேர்தலில் தமிழ்த் தேசியப்பரப்பில் இம்முறை மும்முனைப் போட்டி ஏற்படுவதற்கான நிலைமைகள் அதிகமுள்ளன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்கள் தேசியக் பக்கம் 11 »

## ஜெனிவா அமர்வு இலங்கைக்குப் பெரும் சவால்!

### எச்சரிக்கின்றார் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரோஹித



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 46ஆவது அமர்வு இலங்கைக்குப் பெரும் சவாலாக இருக்கப் போகின்றது என முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

தமிழீழ விடுதலைப்புலிகளுடனான தங்கள் தொடர்புகள் காரணமாக களங்கப்பட்ட பலர் ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட அரசைப் பக்கம் 11 »

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வுக்கு மண்டியிடும் அவல நிலைமை. அந்தப் பாணியைத் தயாரித்த தம்மிக்க பரியாரிக்கும் கொரோனா தொற்றாத வரையில் சரி.

நாடாளுமன்றத்தில் ஐந்தாவது பிரமுகரான இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்தவுக்குத் தொற்று ஏற்பட்ட செய்தி மிகப் பரபரப்பாகியிருக்கின்றது. காரணம் உண்டு.

அவருடன் நெருங்கிப் பழகியவர் என்று கூறப்படும் கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் ஏற்கனவே குடும்பத்தவர்களுடன் தனிமைப்படுத்தலுக்குத் தாமாகவே சென்று விட்டார்.

நேற்றுத் தொற்று அடையாளம் காணப்பட்ட அமைச்சர் பியல் நிஷாந்த நேற்று முன்தினம் அமைச்சர் நாமல் ராஜபக்ஷவுக்கு மிக அருகில் – நெருக்கமாக – பக்கத்துப் பக்கத்தில் – ஒரே மேசையில் – பொது நிகழ்வு ஒன்றில் அமர்ந்திருக்கும் படம் தெற்கில் சமூக ஊடகங்களில் கொடி கட்டிப் பறக்கின்றது. இரண்டு பேருமே – அமைச்சர்கள் நாமல் ராஜபக்ஷவும், பியல் நிஷாந்த இருவருமே – பக்கத்தில் நெருக்கமாக அமர்ந்திருக்கும்போது முகக்கவசம் அணியவில்லை.



முதல் நாள் இருவரும் அருகருகே இப்படி அமர்ந்திருக்கின்றார்கள். அடுத்த நாள் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்படுகின்றது. ஆயின், மற்றவர் – நாமல் ராஜபக்ஷ – என்ன செய்யப் போகின்றார்? நாடாளுமன்றத்தில் ஹக்கீமுக்கு முன்னால் அமர்ந்திருந்தவர் என்பதற்காக சுமந்திரன் வீட்டின் முன்புறத்தில் 'வீட்டில் உள்ளோர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்' என 'ஸ்ரிக்கர்' ஒட்டிய பொலிஸார், இப்போது நாமல் ராஜபக்ஷ விடயத்தில் என்ன செய்யப் போகின்றனர்? மலிந்தால் விவகாரம் சந்திக்கு – சந்தைக்கு – வரும்தானே...! அப்போது பார்ப்போம்.

தம்மிக்க பரியாரியாரின் பாணி மருந்தே போதும், தடுப்பு மருந்தை வெளிநாட்டில் தேடி அலையத் தேவையில்லை என்று நாட்டு மக்களுக்கு உபதேசித்த அமைச்சர் வாசுதேவ நாணயக்கார இப்போது கொரோனாவுக்கு ஆங்கில மருந்து சிகிச்சை பெறுவதற்காக ஆஸ்பத்திரியில் படுத்துக் கிடக்கின்றார்.

தம்மிக்க பரியாரியார் தமது கொரோனாத் தொற்றுத் தடுப்புப் பாணியை நாடாளுமன்றுக்கு எடுத்து வந்து, சபாநாயகருக்கு வழங்கிய சமயம், சபாநாயகருக்கும் ஊடகங்களுக்கும் முன்னால் அதை அருந்தி, படத்துக்கு 'போஸ்' கொடுத்த அமைச்சர் பியல் நிஷாந்தவும் இப்போது கொரோனா பிடியில் சிக்கிக் கொண்டுள்ளார்.

அதைவிட இந்தப் பாணி மருந்துக்காக கேகாலையில் விழுந்தடித்துப் பிரசாரம் செய்த – ஆளும் தரப்பைச் சேர்ந்த – கேகாலைப் பகுதி பிரதேச சபை உறுப்பினரின் சோகக் கதை வித்தியாசமானது.

அந்தப் பாணி மருந்தை தம்மிக்க பரியாரியார் கூறிய அளவுப் பிரமாணம் அவரும், அவரது மனைவியும், நான்கு பிள்ளைகளும் அருந்தினர். அவரது நான்கு பிள்ளைகளும் ஒரே பிரசவத்தில் பிறந்த நால்வர். இப்போது பெற்றோருக்கும் நான்கு பிள்ளைகளுக்கும் கொரோனா பீடித்துவிட்டது. தம்மிக்க பரியாரியாரின் பாணி மருந்தை நம்பாதீர்கள் என்று இப்போது பதிலடிப் பிரசாரத்தை கொரோனாத் தொற்றுக்கு மத்தியிலும் தொலைபேசி மூலம் தீவிரமாக முன்னெடுக்கின்றாராம் சிலாந்த விஜேபாலா என்ற அந்த அரசியல்வாதி.

நாங்கள் எவ்வளவு எச்சரிக்கையாக இருந்தாலும் எம்மை மீறி கொரோனா நம் சுவாசத் தொகுதிக்குள் நுழைந்து விடலாம். தடுப்பூசியை விரைந்து பெறுவதுதான் இந்தத் தொல்லையில் இருந்து தற்காலிகமாகவேனும் விடுதலை பெற ஒருவழியாக இருக்கக் கூடும்.

★ ★ ★

தலைவர் பிரபாகரனின் பிறந்த தினத்தன்று அது பற்றிய செய்தித் தகவலை அவரது படத்துடன் பிரசுரித்தமை தொடர்பில் 'உதயன்' நாளிதழுக்கு எதிராக யாழ்ப்பாண பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரசாத் பெர்னாண்டோ தொடுத்துள்ள வழக்கு இன்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

'உதயன்' சார்பில் இவ்வழக்கைக் கையாளும் பொறுப்பை யாழ்.மாவட்ட எம்.பி.யும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் ஏற்றுக் கொண்டிருக்கின்றார்.

இந்த வழக்கு வெறுமனே 'உதயன்' நிறுவனத்துக்கு எதிரானது என்று ஒதுக்கி விட முடியாது. தமிழர் சார்பான ஊடகத் துறையின் மீது நொட்டிப் பார்க்கும் பரீட்சார்த்த முயற்சி இது. இதில் பொலிஸ் தரப்பு முன்னேற்றம் காணுமானால் வடக்கில் ஒவ்வொரு ஊடகமும் பொலிஸ் சீண்டலுக்கு உள்ளாகும் ஆபத்து உள்ளது.

அரசியல் வேறுபாடுகள், முரண்பாடுகள் மறந்து இந்த வழக்கைக் கையாளுவதற்கு ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனை அழைக்கும் முடிவை எடுத்த உதயன் நிர்வாகமும், அந்த அழைப்பை சட்டத்தரணியாக ஏற்கும் தீர்மானத்தை எடுத்த சட்டத்தரணி சுமந்திரனும் மெச்சப்பட வேண்டியவர்களே.

இன்று கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில், முல்லைத்தீவு நீராவியடிப் பிள்ளையார் கோவில் வளாகத்தில் நீதிவான் நீதிமன்ற உத்தரவை மீறி, பிக்கு ஒருவரின் சடலத்தை எரித்தமை மூலம் நீதிமன்றத்தை அவமதித்தனர் என்று பொதுபல சேனாவின் செயலாளர் ஞானசார தேரருக்கும் ஏனையோருக்கும் எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கின்றது. அவ்வழக்கின் விசாரணையில் சுமந்திரன் முன்னிலையாக வேண்டியிருப்பதால் இன்று 'உதயன்' நிறுவனத்துக்கு எதிரான யாழ் வழக்கில் அவர் பிரசன்னமாகமாட்டார். எனினும் அவரது கனிஷ்ட சட்டத்தரணியாக சட்டத்தரணி திருக்குமரன் முன்னிலையாவார். வழக்கில் உதயனின் சட்டத்தரணியாக சுமந்திரனின் பெயர் பதிவு செய்யப்படும். அடுத்த தவணை வழக்கு விசாரணையின் போது சுமந்திரன் நேரில் முன்னிலையாகி வாதிடுவார்.

இன்று பெரும்பாலும் உதயன் நிர்வாகத் தரப்பின் வாக்குமூலத்தை பொலிஸார் பெற்றுக் கொள்வதற்கான உத்தரவு நீதிமன்றத்தினால் விடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

'உதயன்' மீது இந்த வழக்கைத் தொடர்ந்த யாழ் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இன்பெஸ்டர் பிரசாத் பெர்னாண்டோவுக்கு அடுத்த வாரத்தில் இடம் மாற்றம் என்று பேச்சடிபடுகின்றது. அதற்கு முன்னர் உதயனை ஒரு கை பார்க்கிறேன் என்று துடிக்கிறாராம் அவர்.

ஆனால், சுமந்திரன் வீட்டில் தனிமைப்படுத்தல் 'ஸ்ரிக்கர்' ஒட்டி குசும்பு பண்ணிய அந்த இன்ஸ்பெக்டரை ஒரு வழக்கில் சுமந்திரன் முன் நிறுத்தும் அருமையான வாய்ப்பை 'உதயன்' செய்து கொடுத்திருக்கின்றது. எனவே, பொறுப்பதிகாரி பிரசாத் பெர்னாண்டோ இடம் மாற்றத்தில் போனாலும் ஒவ்வொரு வழக்குத் தவணைக்கும் யாழ்ப்பாணத்துக்கு அவரை மீளக் கூப்பிட்டு பிய்த்து உதற சுமந்திரனுக்கு ஓர் அருமையான வாய்ப்பை ஏற்படுத்தித்தந்துள்ளது 'உதயன்'.

முன்னர் உதயனுக்காகப் பல வழக்குகளில் முன்னிலையானவர்தான் சுமந்திரன். அவற்றுக்குக் கட்டணமின்றி அதை அவர் அப்போது செய்திருக்கலாம் – ஒரே கட்சியினர், ஒரு கட்சிப் பத்திரிகை என்று அடிப்படையில். இப்போது அந்தக் காட்சி மாறிவிட்டது.

தாம் ஒரு சட்டத்தரணி என்ற முறையில் இப்போது விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்று இவ்வழக்கில் அவர் முன்னிலையாகலாம். இந்த வழக்கு ஓர் ஊடக நிறுவனத்துக்கு எதிரானது என்றாலும், ஒட்டுமொத்த தமிழ் ஊடகத்துறைக்கும் விடுவிக்கப்பட்ட சவாலாகும். அதை முறியடிக்க வேண்டிய கடப்பாடு அரசியல்வாதி என்ற முறையில் சுமந்திரனுக்கு உண்டு.

ஆகவே இந்த வழக்கிலும் அவர் 'சும்மா' முன்னிலையாவதே தமிழ் ஊடகத்துறைக்கு அவர் செய்யும் கடப்பாடு – கைமாறாக – இருக்கும்.

தேவையானால், இந்தியாவின் முன்னணி வக்கீல் பிரசாந்த் பூஷனுக்கு நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் அவர் குற்றவாளியாகக் காணப்பட்டபோது அடையாளத்துக்கு ஒரு ரூபா அபராதத்தை இந்திய உச்ச நீதிமன்றம் விதித்த மாதிரி, சுமந்திரனும் இந்த வழக்கில் முன்னிலையாவதற்கு ஒரு சொற்ப கட்டணத்தை அடையாளத்துக்குப் பெறலாம். மூத்த ஊடகவியலாளன் என்றவகையில் என் பரிந்துரை இது.

அத்தோடு இன்னொரு விடயமும் உண்டு. 2009 ஜனவரியில் நான் கடத்தப்பட்டு, பின்னர் அந்தக் கடத்தல் கைதாக அறிவிக்கப்பட்டு, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் இரண்டு மாதங்களுக்கு மேல் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு, இடர்ப்பட்டபோது என் சார்பில் அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்று உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனுவில் சட்டமா அதிபருக்கு அடுத்து இரண்டாவது பிரதிவாதியாகப் பெயர் குறிப்பிடப்பட்டவர் இன்றைய ஜனாதிபதியும் அன்றைய பாதுகாப்புச் செயலாளருமான கோட்டாபய ராஜபக்ஷ. தடுப்புக் காவலில் இருந்த – முகமே தெரியாத – எனக்காகத் தாமாக முன்வந்து இலவசமாக உயர்நீதிமன்றில் பிரசன்னமானவர் சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன். அதுவும் எனது சட்டத்தரணியான கே.வி.தவராசா மற்றும் அவரின் துணைவியார் சட்டத்தரணி கௌரிசங்கரி தவராசா ஆகியோரின் அனுசரணையுடன். என் நாற்பது ஆண்டு கால நண்பரான சட்டத்தரணி தவராசாவும் துணைவியாரும் கூட இலவசமாகவே என் வழக்கை அப்போது கையாண்டனர்.

ஆனால், இன்று நிலைமை எவ்வளவோ மாறிவிட்டது. எல்லாம் அரசியல் செய்த வேலை...!

– மின்னல் –

## சகல இலங்கையர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தத் தீர்மானம் நாட்டின் முன்னேற்றத்தைக் கருத்தில்கொண்டது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

(விரிவான செய்தி 3 ஆம் பக்கத்தில்)

## நேற்றும் 346...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## 270 ஆக அதிகரித்தது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உயிரிழந்தோரில் 5 ஆண்களும், ஒரு பெண்ணும் அடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களம் கூறுகின்றது.

கொழும்பு 03 பகுதியைச் சேர்ந்த 63 வயதான பெண் ஒருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

கொழும்பு 15 பகுதியைச் சேர்ந்த 80 வயதான ஆண் ஒருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் கடந்த 15ஆம் திகதி சிகிச்சை பலனின்றி உயிரிந்துள்ளார்.

அத்துடன், கொழும்பு 15 – முகத்துவாரம் பகுதியைச் சேர்ந்த 75 வயதான ஆண் ஒருவர் கடந்த 15ஆம் திகதி முதியோர் இல்லத்தில் உயிரிழந்துள்ளார்.

தெஹிவளைப் பகுதியைச் சேர்ந்த 63 வயதான ஆண் ஒருவர், நீர்கொழும்பு வைத்தியசாலையிலிருந்து இரணவில கொரோனா சிகிச்சை மத்திய நிலையத்துக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

களுத்துறைப் பகுதியைச் சேர்ந்த 65 வயதான ஆண் ஒருவர் களுத்துறை மாவட்ட பொது வைத்தியசாலையில் கடந்த 14ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.

இரத்தினபுரி பகுதியைச் சேர்ந்த 65 வயதான ஆண் ஒருவர் ஹோமாகம வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

## அரசின் பௌத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆதி ஐயனார் சூலம் பிடுங்கப்பட்டு, அதே இடத்தில் புத்தர் சிலையொன்று வைக்கப்பட்டு வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டே இந்த ஆய்வுப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க இந்தத் தொல்பொருள் ஆய்வுப் பணிகளை ஆரம்பித்து வைத்துள்ளார்.

இராணுவத்தின் 59 ஆவது படைப் பிரிவின் 591 ஆவது பிரிகேட்டினால் ஏற்பாட்டுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இராணுவத்தினரின் கொடிகள் குருந்தூர் மலையைச் சூழ நாட்டப்பட்டு நூற்றுக்கணக்கான இராணுவம் மற்றும் பொலிஸார் பாதுகாப்புக் கடமைகளுக்காக குருந்தூர் மலையிலிருந்து அருகிலுள்ள குமுழ முனை கிராமம் வரைக்கும் நிறுத்தப்பட்டு இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

நாட்டில் கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காலத்துக்குள்ளும் அரசு மீளவும் பௌத்தமயமாக்கல் செயற்றிட்டத்தில் இறங்கியுள்ளமை தொடர்பில் பலராலும் விசனம் வெளியிடப்பட்டுள்ள நிலையில் குறித்த நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப்பட்டது.

நேற்றுக் காலை குருந்தூர் மலைப் பகுதியில் நடைபெற்ற நிகழ் வில் இராஜாங்க அமைச்சருடன், தொல்பொருள் திணைக்களத்தின் செயலாளர், விரிவுரையாளர் அருண மனதுங்க, முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் க.விமலநாதன், முல்லைத்தீவு மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ரத்நாயக்க, தொல்பொருள் திணைக்கள மற்றும் படை அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

தமிழ் மக்கள் பாரம்பரியமாக வழிபட்டு வந்த குருந்தூர் மலையில் பௌத்த தேரர்களால் விகாரை அமைக்க முயற்சித்த போதும், அதற்கு முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்திருந்தது.

இதையடுத்து, அவர்கள் தமது தொல்பொருள் இடமாக அதை நிறுவி, பௌத்த விகாரை அமைக்கும் நோக்குடன் அகழ்வாராய்ச்சி நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாகப் பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டியிருந்தனர்.

மக்களின் முறைப்பாட்டின் பேரில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், செல்வம் அடைக்கலநாதன், எஸ். வினோநோகராதலிங்கம் ஆகியோர் இந்தப் பகுதியைப் பார்வையிடுவதற்காக நேற்றுமுன்தினம் சென்றிருந்த நிலையில் இராணுவத்தினரும் தொல்லியல் திணைக்களத்தினரும் தடைகளை ஏற்படுத்தினர் மிக நீண்ட வாய்தர்க்கத்தை அடுத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரம் உட்செல்ல அனுமதிக்கப்பட்டனர். அந்த இடத்துக்குச் செய்தி சேகரிக்கச் சென்றிருந்த பிரதேச ஊடக வியலாளர்களுக்கு நேற்றுமுன்தினம் அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில், நேற்று இராஜாங்க அமைச்சர் வருகை தந்திருந்த சூழலில் கொழும்பிலிருந்து வருகை தந்திருந்த ஊடகவியலாளர்களுக்கு அனுமதிவழங்கப்பட்டது. இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டி பிரதேச ஊடகவியலாளர்கள் தொல்லியல் திணைக்களத்திடம் கேள்வி எழுப்பிய நிலையில் பிராந்திய ஊடகவியலாளர்களும் இறுதியில் அனுமதிக்கப்பட்டனர். இருந்த போதிலும் அகழ்வாராய்ச்சி பணி இடம்பெறும் மலையில் உள் பகுதியில் காணப்பட்ட படையினர் பிரதேச ஊடகவியலாளர்களை நீங்கள் தமிழா எனக் கேட்டு வெளியே செல்லுமாறு பணித்தமையோடு ஊடகவியலாளர்களைப் புகைப்படமும் எடுத்தனர்.

தேவை
பனங்கிழங்கு மொத்த கொள்வனவுக்கு தேவை.
தொடர்புகளுக்கு - 0760117002

# நாடாளுமன்ற சபை அமர்வுகளில் ரஞ்சனை பங்கேற்க அனுமதிக்குக!

## சபாநாயகரிடம் ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவை, சபை அமர்வுகளில் கலந்துகொள்ள அனுமதிக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தி சபாநாயகரிடம் கோரிக்கை விடுக்குமென நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

மனோ கணேசன் தனது டுவிட்டர் பக்கத்திலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

குறித்த ருவிட்டர் பக்கத்தில் அவர் கூறியுள்ளவை வருமாறு–

'ரஞ்சன் ராமநாயக்கவை நாடாளுமன்ற கூட்டங்களில் சமூகமளிக்க அனுமதிக்குமாறும், இது நீதிமன்ற வரம்புக்கு வெளியே நாடாளுமன்றத்தின் உரிமை என்ற



அடிப்படையில், சபாநாயகரை ஐக்கிய மக்கள் சக்தியான எதிரணி அதிகாரபூர்வமாகக் கோரும்' என பதிவேற்றியுள்ளார்.

# 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் கட்டாய இராணுவ பயிற்சிகள் வழங்கல்!

## கோட்டாபய அரசின் திட்டம் வெளியானது



நாட்டில் ஒழுக்கமான சமுதாயம் ஒன்றை உருவாக்கும் நோக்கில் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் கட்டாய இராணுவ பயற்சியை வழங்குவது தொடர்பாக கோட்டாபய அரசாங்கம் ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான யோசனையை தான் நாடாளுமன்றில் முன் வைக்கவுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

நாட்டில் சட்டத்தை மதிக்கும் சமுதாயத்தை உருவாக்கும் நோக்குடனேயே இந்த திட்டத்தை அமுல்படுத்த எண்ணியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

உலகில் உள்ள சில நாடுகள் இவ்வாறான திட்டத்தை அமுல்படுத்தி சிறந்த பெறுபேற்றை பெற்றுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கொரோனாத் தொற்று நிலைமை பற்றிய அறிக்கையில் சந்தேகம்!

அரசாங்கம் நாளாந்தம் வெளியிடும் கொரோனாத் தொற்று நிலைவரம் தொடர்பான அறிக்கை தொடர்பாக ஐக்கிய மக்கள் சக்தி சந்தேகம் வெளியிட்டுள்ளது.

மேலும் உக்ரேனிய சுற்றுலாப் பயணிகளால் நாட்டுக்குக் கொண்டு வரப்பட்ட கொரோனா தொற்றுகள் இப்போது கண்டியில் உள்ள புனித இடங்களில் பரவி வருவதாகவும் அந்தக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார, சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் என்றும் கூறினார்.

மேலும் தற்போதைய அரசாங்கத்தின் தவறான அணுகுமுறையால் 260 பேர் கொரோனா தொற்றால் உயிரிழந்துள்ளனர் எனவும் அவர் குற்றம் சாட்டினார்.

ஆகவே, இந்த இறப்புகளுக்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும் என்றும், உடனடியாக சுகாதார அமைச்சர் பதவி விலக வேண்டும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

# அதிகபட்ச கொரோனா நோயாளர் இந்த வருடத்தில் ஞாயிறு பதிவு!

இலங்கையில் இந்த ஆண்டில் ஒரே நாளில் அதிகபட்ச கொரோனா நோயாளர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை பதிவாகியுள்ளனர்.

அதன்படி 763 புதிய கொரோனா நோயாளர்கள் ஞாயிற்றுக்கிழமை அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் நாட்டின் மொத்த கொரோனா நோயாளர்களது எண்ணிக்கை 53 ஆயிரத்து 76 ஆக உயர்வடைந்துள்ளது.

குறித்த கொரோனா நோயாளர்களில் 747 பேர் மினுவாங்கொட – பேலியகொட கொவிட் கொத்தணிப் பரவலுடன் தொடர்புடையவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஏனைய இருவர் சிறைச்சாலை கொத்தணியுடனும் 14 பேர் வெளிநாடுகளில் இருந்து வருகை தந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி, மினுவாங்கொட – பேலியகொட கொரோனா கொத்தணிப் பரவலில் சிக்கிய மொத்த கொரோனா நோயாளர்களது எண்ணிக்கை 49 ஆயிரத்து 274 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கையும் 264 ஆகப் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பில் மேலும் மூவருக்குத் தொற்று!

மட்டக்களப்பு அரசடி கிராமசேவகர் பிரிவில், மேலும் மூவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தனிமைப்படுத்தப்பட்டு முடக்கப்பட்டுள்ள மட்டக்களப்பு – அரசடி கிராம சேவகர் பிரிவில், நேற்று (திங்கட்கிழமை) 100 பேருக்கு மேற்கொண்ட அன்டிஜன் பரிசோதனையில் மூவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாகலிங்கம் மயூரன் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை மூர் வீதியில் உயிரிழந்த 79 வயதுடைய முதியவர் ஒருவருக்கு மேற்கொண்ட அன்டிஜன் பரிசோதனையில், கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதை அடுத்து, அந்த கிராமசேவகர் பிரிவு முடக்கப்பட்டதுடன் உயிரிழந்த குறித்த நபரின் வீட்டில் உள்ளவர்களுக்கு மேற்கொண்ட பரிசோதனையில் 5 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதனையடுத்து நேற்று அந்தப் பகுதியைச் சேர்ந்த 100 பேருக்கு மாநகரசபை பொதுச் சந்தை பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் புதிதாக 3 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# செங்கலடி பிரதேச சபை கூட்டமைப்பு வசமானது!



மட்டக்களப்பு – ஏறாவூர்பற்று செங்கலடி பிரதேச சபையின் தவிசாளராக சின்னத்துரை சர்வானந்தன் ஆறு மேலதிக வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டார்.

மட்டக்களப்பு – ஏறாவூர்பற்று செங்கலடி பிரதேச சபையின் புதிய தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான அமர்வு, நேற்று (திங்கட்கிழமை) கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ந.மணிவண்ணன் தலைமையில் நடைபெற்றது.

31 பிரதேச சபை உறுப்பினர்களைக் கொண்ட மேற்படி பிரதேச சபையில் ஏற்கனவே தவிசாளராக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ந.கதிரவேல் பதவி வகித்தார்.

இந்நிலையில், 2021 ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் இரண்டு தடவைகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு, தோற்கடிக்கப்பட்டமையால் உள்ளூராட்சி சபைகள் சட்டத்தின் பிரகாரம் தவிசாளர் பதவி இழக்கப்பட்டார்.

புதிய தவிசாளரைத் தெரிவு செய்வதற்காக திறந்த வெளி வாக்கெடுப்புக்கு விடுவதா அல்லது இரகசிய வாக்கெடுப்புக்கு விடுவதா என்பது தொடர்பாக கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரால் உறுப்பினர்களிடம் கோரப்பட்டது. இதற்கு திறந்தவெளி வாக்கெடுப்புக்கு அவர்கள் விடுமாறு கோரியிருந்தனர்.

இதன்போது வாக்கெடுப்பிற்கு போட்டியிட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பின் பிரதேச சபை உறுப்பினர் சி.சர்வானந்தனை, வ.சந்திரவர்மன் (த.தே.கூ) முன்மொழிய அதை தமிழ் தேசிய கூட்டமைப்பின் பி.சபை உறுப்பினர் சி.சிவானந்தன் வழி மொழிந்தார்.

இதேவேளை தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் உறுப்பினர் ந.திருநாவுக்கரசுவை, நா.மோகன்ராஜ் (த.ம.வி.பு) முன்மொழிய அதை உறுப்பினர் க.லோகிதராஜா (த.ம.வி.பு) வழி மொழிந்தார்.

வாக்கெடுப்பில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் போட்டியாளர் சி.சர்வானந்தனுக்கு ஆதரவாக த.தே.கூ – 07, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி –06, ஐ.தே.க – 03, தமிழர் விடுதலைக் கூட்டணி – 01 ஆகிய கட்சிகளைச் சேர்ந்த 17 உறுப்பினர்களும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் போட்டியாளர் ந.திருநாவுக்கரசுவுக்கு ஆதரவாக த.ம.வி.பு – 08, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி – 01, ஐ.தே.க – 01, ஐக்கிய சமாதான கூட்டமைப்பு – 01 ஆகிய கட்சிகள் சார்பாக 11 உறுப்பினர்களின் வாக்குகளும் கிடைக்கப்பெற்றன. மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் மற்றும் ஜனநாயக தேசிய இயக்கம் கட்சியின் உறுப்பினர் ஒருவர் ஆகிய இருவரும் நடுநிலை வகித்தனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினரொருவர் சபைக்கு சமூகமளிக்கவில்லை. 06 மேலதிக வாக்குகளால் சி.சிவானந்தன்(த.தே.கூ) தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவனேசத்துரை சந்திரகாந்தன்(பிள்ளையான்), தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட தலைவர் கு.ஹிரிதரன் ஆகியோர் சபைக்குள் பிரசன்னமாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் கொரோனாத் தடுப்பூசி அடுத்த மாத இறுதியில் பாவனையில்

கொரோனா வைரஸ் தடுப்பூசியை செலுத்தும் பணி பெப்ரவரி இறுதி வாரத்தில் அல்லது மார்ச் மாத தொடக்கத்தில் அரசாங்கம் ஆரம்பிக்கும் என கொரோனா தடுப்பூசி திட்டம் மற்றும் தேசிய அபிவிருத்தி தொடர்பிலான ஜனாதிபதி செயலணியின் தலைவர் லலித் வீரதுங்க குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா, சீனா மற்றும் ரஷ்யாவிலிருந்து தடுப்பூசிகளைப் பெறுவதற்கான இருதரப்பு கலந்துரையாடல்கள் நடைபெற்று வருகின்றன என அவர் மேலும் தெரிவித்தார்.

உலக சுகாதார அமைப்பு 20 சதவீத மக்களுக்குத் தேவையான தடுப்பூசி மருந்துகளை நன்கொடையாக அளிக்கும் என்றும் உலக சுகாதார அமைப்புக்கு இது தொடர்பான தேசிய திட்டத்தை சுகாதார அமைச்சகம் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் உலக சுகாதார அமைப்பு தங்களுக்கு எந்த தடுப்பூசியை இலவசமாக வழங்கும் என்பது தங்களுக்குத் தெரியாது என்றும் அவர் கூறினார்.

இந்தியாவில் தேசிய தடுப்பூசி பயன்பாடு இலங்கைக்கு ஓர் அனுபவமாக இருக்கும் என்றும் தெரிவித்தார்.

இதேநேரம், சீன தடுப்பூசிகள் தொடர்பாகக் கருத்து தெரிவித்த அவர், இந்தோனேசியா போன்ற நாடுகள் தங்கள் மக்களுக்கு தடுப்பூசிகளை செலுத்தும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளன.

தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையம் (என்.எம்.ஆர்.ஏ) ஒப்புதல் அளித்தவுடன் இலங்கை அரசாங்கமும் தடுப்பூசிகளுக்கு ஒப்புதல் அளிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

**நமது பார்வை**
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ‘குருந்தூரில் குந்திய புத்தர்.’

**தமிழர் தேசத்தை சிங்கள மயப்படுத்தி ஆக்கிரமிக்கும் தனது குரூர – கோர – முகத்தை பௌத்த சிங்களப் பேரினவாதம் மீண்டும் வெளிப்படையாக – அப்பட்டமாக – காட்டத் தொடங்கியிருக்கின்றது.**

**தமிழரின் பாரம்பரிய தாயகமான வடக்கையும், கிழக்கையும் பிரிக்கும் விதத்தில் இரண்டுக்கும் நடுவே உள்ள தமிழர் நிலங்களை ஆக்கிரமித்து, கபளீகரம் செய்து, சிங்கள மயப்படுத்துவதன் மூலம் தமிழரின் தாயக இருப்புக்கான உரிமையை சிதைத்தழிப்பது என்ற குரூரத் திட்டத்தை சிங்கள மேலாதிக்க வெறி ஆட்சிப்பீடங்கள், இலங்கை பிரிட்டிஷ் கொலனித்துவ ஆட்சியாளர்களிடம் இருந்து சுதந்திரம் பெற்ற காலம் முதலே முன்னெடுத்து வருகின்றன.**

**அதன் மற்றொரு கொடூர அங்கத்தை முல்லைத்தீவு குருந்தூர் மலை பகுதியில் கடந்த சில நாள்களாக தமிழர் தாயகம் எதிர் கொள்கின்றது.**

**தமிழ் மக்கள் வழிபாடு செய்து வந்த புராதன ஆதி சிவன் ஐயனார் ஆலயம் அமைத்துள்ள வயல் நிலங்கள், காணிகள் உள்ளடங்கிய குமுழமுனை, தண்ணிமுறிப்பு, குருந்தூர்மலை மற்றும் மணலாறு, படைக்கல்லு ஆகிய பகுதிகளில் இரண்டு புராதன விகாரகளுக்கான சிதைவுகள் காணப்படுகின்றன எனத் தெரிவித்து அப்பகுதியில் தொல்லியல் திணைக்களத்தினால் அகழ்வாராய்ச்சிப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இராணுவம் அதற்கு அனுசரணைப் பணி வழங்குகின்றது.**

**குருந்தூர் மாலையில் இருந்த சூலம் இருந்த இடம் தெரியாது உடைத்தெறியப்பட்டுள்ளது என்றும் –**

**அங்கிருந்த இந்து ஆலயச் சின்னங்கள் அனைத்தும் காணாமல் செய்யப்பட்டுள்ளன என்றும் –**

**அங்கு நேற்று முன்தினம் நேரில் சென்று வந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் விசனத்துடன் தெரிவித்துள்ளனர்.**

**தமிழர் தாயகப் பிரதேசத்தை சிங்கள மயப்படுத்தும் நயவஞ்சக நடவடிக்கை அரச திட்டமாக, தொல்லியல் திணைக்களச் செயற்பாடாக, கட்டவிழ்கின்றது.**

**குருந்தூர்மலை இடம் தொடர்பில் ஏற்கனவே நீதிமன்ற உத்தரவு ஒன்று இருப்பதாகக் கூறப்படுகின்றது. அந்த இடத்தின் சர்ச்சை தொடர்பாக பொலிஸார் தாக்கல் செய்த வழக்கில் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தினால் 2018 இல் கட்டளை ஒன்று வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.**

**அங்கே உள்ள – தமிழ் மக்களுக்குச் சொந்தமான – ஆலயத்தில் மக்கள் சென்று வழிபடலாம், எந்தவிதமான கட்டுமானங்களையும் இரு சாராரும் செய்ய முடியாது, தொல்லியல் திணைக்களம் மட்டும் ஆய்வுகளைச் செய்யலாம், பொது தரப்பினர் ஆய்வுகளைச் செய்ய முடியாது, தொல்லியல் ஆய்வுகளைச் செய்வதாக இருந்தால் யாழ் பல்கலைக்கழகத் தொல்லியல் துறையின் பங்களிப்போடு அது மேற்கொள்ளப்பட வேண்டும். – என நீதிமன்றக் கட்டளையில் கூறப்பட்டிருப்பதாகத் தெரியவந்தது.**

**ஏற்கனவே அப்பகுதியில் புதிய புத்தர் வந்து குந்தி விட்டார். தொல்லியல் திணைக்களமும் ஆய்வுப் பணியை ஆரம்பித்திருப்பதாகக் கூறப்படுகின்றது. ஆனால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தொல்லியல் துறையின் பங்களிப்பு ஏதும் பெறப்பட்டது என்பதற்குத் தகவல் இல்லை.**

**நீதிமன்ற உத்தரவைத் தூக்கிக் கடாசிவிட்டு பௌத்த, சிங்கள ஆக்கிரமிப்பு தனது கைவரிசையைக் காட்டத் தொடங்கியிருப்பதாகவே தெரிகின்றது.**

**தன்னுடைய ஆக்கிரமிப்பு நடவடிக்கையை முன்னெடுப்பதற்காக அப்பிரதேசம் எங்கும் சிங்கள இராணுவப் படையையும் பொலிஸையும் குவித்திருக்கின்றது ஆளும் தரப்பு.**

**இந்த கோட்டபாய அரசு அதிகாரத்துக்கு வந்ததோடே தன்னுடைய பௌத்த, சிங்கள ஆக்கிரமிப்புக் கொடூரத்தை குரூரமாகக் காட்டும் என்பது எதிர் பார்க்கப்பட்டதே. அதன் கோர வடிவத்தை அது இப்போது வெளிப்படுத்தத் தொடங்கியிருக்கின்றது.**

**கிழக்கில் தொல்பொருள் பிரதேசத்தை பாதுகாப்பதற்கு என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தலைமையில் தனித்து சிங்களவர்களை மட்டும் கொண்ட ஜனாதிபதி செயலணியை அமைத்த போதே கோட்டா அரசின் குள்ளநரித் திட்டம் அம்பலமாகிவிட்டது.**

**இப்போது வடக்கில் முல்லைத் தீவு மாவட்டத்திலும் அந்த வேலையை அது தங்கு தடங்கலின்றி ஆரம்பித்திருக்கின்றது என்பதற்கு வெளிப்படையான உதாரணம்தான் குருந்தூர்மலை ஆக்கிரமிப்பு.**

**இலங்கைத் தீவு முழுவதும் பௌத்த, சிங்கள மக்களுக்குரியது என்ற பேரினவாத வெறிச் சிந்தனையின் – மேலாண்மைத் திமிர்ப் போக்கின் – வெளிப்பாடுதான் இந்த ஆக்கிரமிப்பு அட்டூழியம்.**

**சிங்கள ஆட்சிப் பீடத்துக்கு காவடி தூக்கி, பிச்சைப்பாத்திரம் ஏந்தி, அலையும் சிறபான்மையினரின் அரசியல் தலைமைகள் இந்தப் பேரினவாத ஆக்கிரமிப்புச் செயற்பாட்டுக்கும் கூசா தூக்கி, செம்பு காவி, கழுவிக் கொடுக்கப் போகின்றனவா? அவை கொஞ்சம் வாய் திறந்தால் நல்லது.**

# இந்த வருடத்தின் இறுதிக்குள் நிறைவேறும் புதிய அரசமைப்பு!

### கல்வி அமைச்சர் பீரிஸ் திடசங்கற்பம்



கொழும்பு, ஜன.19

புதிய அரசமைப்பு உருவாக்கம் ஒருபோதும் காலம் தாழ்த்தப்பட மாட்டாது. இந்த வருடத்தின் இறுதிக்குள் புதிய அரசமைப்பொன்றை உருவாக்கி அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றிக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் அதிகமுள்ளன என்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

பேராதனிய – கெட்டம்பே விகாரையின் விகாரஸ்தானிதிபதியுடனான சந்திப்பின் பின்னரே அமைச்சர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

1978 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அரசமைப்பு 43 வருடங்கள் பழைமை வாய்ந்ததாகும். அவ்வாறிருக்கையில் புதிய அரசமைப்பொன்றை உருவாக்குதல் என்பது மிகவும் கவனத்துடன் முன்னெடுக்க வேண்டிய விடயமாகும். எனவே தான் ஆரம்பத்திலேயே நாம் நிபுணர்கள் குழுவொன்றை நியமித்தோம்.

அந்த நிபுணர்கள் குழுவில் சிரேஷ்ட ஜனாதிபதி சட்டத்தரணிகள் அங்கத்துவம் வகிக்கின்றனர். எதிர்வரும் ஓரிரு மாதங்களில் அவர்களது நிலைப்பாடுகளும் பரிந்துரைகளும் எமக்குக் கிடைக்கப் பெறும். அதன் பின்னர் நாடாளுமன்றத்தில் அது தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

அதற்கமைய இந்த வருடத்தின் இறுதிக்குள் புதிய அரசமைப்பொன்றை உருவாக்கி அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றிக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் அதிகமுள்ளன.

அதனை நாம் ஒருபோதும் காலம் தாழ்த்தப் போவதில்லை. இதனை எதிர்வரும் 2 அல்லது 3 வருடங்களுக்கு காலம் தாழ்த்தினால் அது பிரயோசனமற்ற செயற்பாடாகும்.

கொவிட் தொற்று அச்சுறுத்தல் என்பது இலங்கையில் மாத்திரமல்ல. முழு உலகமும் முகங்கொடுத்துள்ள பாரிய சவாலாகும். எனவே இதற்கு நாம் அடிபணிவதா? அடிபணிந்து அனைத்து செயற்பாடுகளையும் இடைநிறுத்துவதா? இதனை விடப் பாரிய சவால்களுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் முகங்கொடுத்து அவற்றை வெற்றி கொண்ட நாடு இலங்கையாகும்.

30 வருட காலமாக நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தை அவ்வாறு வெற்றிகொள்ள முடியும் என்றும் நாட்டில் மீண்டும் அமைதியை நிலைநாட்ட முடியும் என்றும் யார் எண்ணினர்? எனவே, கொவிட் தொற்றுக்கு நாம் ஒருபோதும் அடிபணியப் போவதில்லை. சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்களின் கீழ் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அச்சுறுத்தல் காணப்படுகிறது என்பதற்காக பாடசாலைகளையும் தொடர்ந்தும் மூடி வைத்திருக்க முடியாது. எனவே, எவ்வித செயற்பாடுகளையும் அரசாங்கம் தடையின்றி முன்னெடுத்துச் செல்லும். – என்றார்.

# வவுனியாவில் விபத்து ஒருவர் படுகாயமடைவு!



வவுனியா –செட்டிகுளம் நகர்பகுதியில் நேற்று (திங்கட்கிழமை) காலை இடம்பெற்ற விபத்தில், ஒருவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

செட்டிக்குளம் நகர்பகுதியில் மோட்டர் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த நபர் வீதியைக் கடக்க முற்பட்டபோது மதவாச்சியில் இருந்து மன்னார் நோக்கி சென்ற டிப்பர் வாகனம் மோதியதில் இந்த விபத்து இடம் பெற்றது.

இதன்போது விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் படுகாயமடைந்த நிலையில் செட்டிக்குளம் பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

குறித்த விபத்து தொடர்பாக செட்டிகுளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# இலங்கையில் உளுந்தின் விலை 2 ஆயிரம் ரூபாவாக எகிறியது!

நாட்டில் உளுந்து இறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்டதையடுத்து, சந்தையில் உளுந்தின் விலை இரண்டாயிரம் ரூபாவாக எகிறியுள்ளது.

உள்ளூர் உற்பத்திகளை அதிகரிக்கும் நோக்கில், கடந்த வருடம் பல பொருள்களுக்கு அரசாங்கத்தால் இறக்குமதித் தடை விதிக்கப்பட்டது.

இதனடிப்படையில், உளுந்து இறக்குமதிக்கும் கடந்த ஜூன் மாதம் முதல் தடை விதிக்கப்பட்டது.

இந்நிலையில், நாட்டின் உளுந்து விலை அதிகரித்துள்ளதுடன், உளுந்துக்குப் பாரிய தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்பட்ட காலப்பகுதியில் 300 ரூபாவாகக் காணப்பட்ட ஒரு கிலோ உளுந்து, தற்போது சுமார் 2 ஆயிரம் ரூபாவாக அதிகரித்துள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

# உக்ரைன் சுற்றுலாப் பயணிகள் வருகை 4 கோடியே 20 லட்சம் ரூபா வருமானம்

உக்ரைன் நாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையால் இலங்கை சுற்றுலாத்துறைக்கு 4 கோடியே 20 லட்சம் ரூபா வருமானம் கிடைத்துள்ளதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் பரவல் அச்சுறுத்தல் காரணமாக விமான நிலைய செயற்பாடுகள் கட்டுப்படுத்தப்பட்டிருந்த நிலையில், பைலட் திட்டத்துக்கு அமைவாகக் குறைந்த அளவிலான சுற்றுலாப் பயணிகளை அழைப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதற்கமைய கடந்த வருடம் டிசெம்பர் 28 ஆம் திகதி சுற்றுலாப் பயணிகளுக்காக விமான நிலையங்கள் திறக்கப்பட்டதன் பின்னர், 180 சுற்றுலாப் பயணிகளுடன் இலங்கைக்கான முதல் பயணிகள் விமானம் உக்ரைன் நாட்டில் இருந்து மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது.

அதன் பின்னர் உக்ரைன் நாட்டு சுற்றுலாப்பயணிகள் கட்டங்கட்டமாக நாட்டுக்கு அழைத்துவரப்பட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மூன்றாம் உலக மகாயுத்தம் எனச் சொல்லத்தக்கவகையில்கொரோனா எனும் தொற்று நோயின் தாக்கம் உலகையே அச்சுறுத்தி வருகின்றது. அந்த வகையில் உலக நாடுகளின் திட்டங்கள் அனைத்திலும் சடுதியானதும் எதிர்பாரா ததுமான மாற்றங்கள் நடந்தேறி வருகின் றன. ஆட்சியாளர்களும், மக்களும் இம் மாற்றங்களை முழுமையாக எதிர்கொள்ள முடியாது திணறிவருகின்றனர். ஒரு சமூ கக்கட்டமைப்பின் அத்தனை பரிமாணங் களும் அதிர்வினைச் சந்தித்து வருகின்றன. கல்வி, பொருளாதாரம், கலாசார நிகழ்வு கள் போன்ற அம்சங்களில் பலமான தாக் கம் ஏற்பட்டு வருகின்றது. பல புதிய மாற்று முறைமைகள் தினம்தினம் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. இயற்கையின் பிடியில் மானிட குலம் உறைப்பாகக் கற்று வருகின்றது.




> பலவீனமான ஓர் இனத்தின் பலம் மிக்க ஆயுதமா கத்தான் கல்வி அமைகின்றது. அண்மைக் காலங்க ளில் கல்வி அடைவு மீது சாதகமா னதும், பாதகமானதுமான விமர்சனங்களும், நியாயப்படுத்தல் களும் நடந்தேறி வருகின்றன. எனினும் இக் கல்விமுறை நேர் மனப்பாங்கையும், சமூகம் மீதும் இயற்கையின்பாலும் சாதகமான நடத்தைக் கோலங்களை எமது இளையோர்கள் மத்தியில் ஏற்படுத்துவதில் தவறியிருக் கின்றது என்ற பலமான பார்வை அனைவரிடமும் உண்டு.

# நல்லாசிரியர்களுக்கு பாவை தரும் பாடம்

கல்விப்புலத்தில் இலங்கையின் நீண்ட விடுமுறையின் பின் பாடசாலைகள் திறக்கப்பட்டு வரு கின்றன. மாணவர்களும், ஆசிரியர்களும் மிகநீண்ட விடுமுறையின்பின் முற்றிலும் மாறுபட்ட புதிய சூழ் நிலையில் பாடசாலையில் கற்றல் – கற்பித்தல் செயற் பாட்டை முன்னெடுக்கத் தயாராக வேண்டியுள்ளது.

நீண்ட கொரோனா விடுமுறை, வழமைக்கு மாறான மாரிகாலம், ஒரே நேரத்தில் பல முனைச் சவால்கள். இத்தனை முனைச்சவால்களும் இளைய சந்ததியின் மீதும் நேரடியானதும் மறை முகமானதுமான தாக்கங் களை ஏற்படுத்தி வருகின்றன. அத்தனை சவால்களை யும் எதிர்கொண்டு மாணவர்களுக்கு சிறந்த கல்வியை ஊட்டி எதிர்கால சந்ததியை வளமாக்கும் பெரும் பொறுப்பு ஆசிரிய சமூகத்தின் முன் இருக்கின்றது. இந்த வகையில் –



தம்பிராசா யுகேஸ்
(அதிபர், சிறுப்பிட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை)

**'மாரிமலை முழைஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும் சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து வேரிமயிர் பொங்க எப்பாடும் பேர்ந்துதறி மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப் போதருமா போலே....'** – என்ற

கோதை ஆண்டாளின் திருப்பாவைப் பாடலை மீட்டுப் பார்ப்பது அளவற்ற களிப்பைத் தரும். அது புதிய விழிப்பையும் தரும்.

நீண்ட மாரிகாலப் பொழுதில் ஒரு சாதகமற்ற சூழ் நிலையில் மலையொன்றின் குகையொன்றில் சிங்கம் உறங்குகின்றது. 'மன்னிக் கிடந்துறங்கல்' எனும்போது வெளிச்சூழலினின் எத்தாக்கமும் அதாவது குளிர், மின்னல், முழக்கம், பகைவிலங்கு போன்றன போன்ற தாக்கங்களுக்கு அலட்டிக் கொள்ளாது சிங்கம் படுத் துறங்குகின்றது. தன்மீது அதிக நம்பிக்கையும் ஆற்றலும் கொண்ட சிங்கம் அவ்வாறுதானே படுத்துறங்கும்? பின்னொரு பொழுதில் மாரி நின்று மழை குறையும் போது அந்தச் சாதகச் சூழ்நிலையை உணர்ந்த சிங்கம் அதுபற்றி முழுதும் விளங்கி உறக்கம் தெளிந்து புதிய உணர்வைப் பெறும். தீப்பொறி பறக்குமாறு விழித்துக் கொள்ளும்.

அதுபோல, நீண்ட விடுமுறையில் ஒரு சாதகமற்ற பொழுதில் சாதகமான பின்னொரு பொழுதை எதிர் பார்த்து ஓய்வுகொண்ட ஆசிரியர்கள் எதிர்கால சந்ததி களை வளம்கொள்ள வைக்கத்தங்களை ஓய்வுக்காளாக் கிய சீரிய ஆசிரியர்கள், ஓய்விலும் தம் ஆற்றலும் அர்ப்பணிப்பும் பேரூக்கமும் குன்றா ஆசிரியர்கள், சாதகமான பின்னொரு பொழுது கிடைக்கும் போது மாரி குன்றி மழை குறைந்து, கொரோனா சூழலை எதிர்கொள்ளும் வகையறிந்து, திறனுணர்ந்து, மீளவும் தயாராகுகிறார்கள். தீப்பொறி பறக்குமாறு சிங்கம் விழித்ததுபோல, சிங்கத்தின் சீற்றம் குறையாது பிற்பொழுதில் மீண்டது போல, மீளவும் ஒரு புதிய பொழு தில் புதிய ஆண்டில் ஆசிரியர்கள் குன்றாத பேரூக்கத் துடன் மீண்டெழுதல் வேண்டும்.

சிங்கம் தன் பிடரி மயிர் சிலிர்த்து தன்னை எல்லாப் புறமும் உதறித் தயார்ப்படுத்திப் புதிய உற்சாகம் பெறும். அதுபோல சாதகமாக காலம் உணர்ந்த ஆசிரியர்கள் கற்பித்தலுக்கு தம்மைத் தயாராக்க வேண்டும்.

ஏலவே நீண்டபொழுதில் பாடவிதானம் முழுமை பெறாது போயிருக்கும். அடைய வேண்டிய தேர்ச்சி களை முறையாக அடையாமலேயே மாணவர்கள் புதிய வகுப்பில் காலடி எடுத்து வைத்துள்ளார்கள். எவ்வெவ் அலகுகள் விடுபட்டன, எத் தேர்ச்சிகள் அடை யப்படவில்லை என்ற விவரங்களை இற்றைப்படுத்தி அவற்றை உணர்ந்து தம்மைத் தயார்ப்படுத்த வேண் டும். 'எப்பாடும் பேர்ந்துதறி' சிங்கம் செல்வது போல அனைத்து முறையிலும் தன்னைத் தயாராக்க வேண் டும். தன் குடும்பப் பொறுப்பை நிறைவேற்றுவது மட் டுமன்றி, சமூகப்பொறுப்பையும், தொழிற் கடப்பாடுகளை யும் நிறைவேற்ற வேண்டும். எல்லாக் குடும்பங்களிலி ருந்து வரும் சிறார்களை உரிய சுகாதாரப் பாதுகாப்பை பின்பற்றும் வண்ணம் விழிப்பாகச் செயற்பட வேண்டும். கற்பித்தல் பணி மட்டுமன்றி கொவிட் – 19 சுகாதார பாதுகாப்பு ஏலவே அச்ச நிலையிலிருக்கும் குழந்தை களின் உள ஆரோக்கியம், தேக ஆரோக்கியம் என் பவற்றையும் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

சிங்கம் தன் உடலை நிமிர்த்திக் கர்ச்சித்துப் புறப் படுவது போல, ஒவ்வொரு ஆசிரியரும் இதை ஒரு சப



தமாக எடுத்துச் செயற்பட வேண்டும். வெறுமனே தொழில் என்று கருதாமல் இதை உளமார்ந்த சபத மாக எடுத்து 'முழங்கிப் புறப்பட்டு போதருமா போல' செயற்பட வேண்டும். அப்போதுதான் கடந்த நாள்களில் இழந்த கல்வியை எமது சமூகம் மீளப் பெற முடியும்.

பலவீனமான ஓர் இனத்தின் பலம் மிக்க ஆயுதமா கத்தான் கல்வி அமைகின்றது. அண்மைக் காலங்க ளில் கல்வி அடைவு மீது சாதகமானதும், பாதகமான துமான விமர்சனங்களும், நியாயப்படுத்தல்களும் நடந்தேறி வருகின்றன. எனினும் இக் கல்விமுறை நேர்மனப்பாங்கையும், சமூகம் மீதும் இயற்கையின்பா லும் சாதகமான நடத்தைக் கோலங்களை எமது இளையோர்கள்மத்தியில்ஏற்படுத்துவதில்தவறியிருக்கின் றது என்ற பலமான பார்வை அனைவரிடமும் உண்டு.

இத்தகைய நிலையில் ஆசிரியர்கள் எமது சமூகத்தை முன்னோக்கி நகர்த்த வேண்டிய முனைப்பான பார்வையும் திடசங்கற்பமும் கொள்ள வேண்டும். இதைத்தான் பாவையில் கோதை 'முழங்கிப் புறப்பட்டு' எனக் குறிப்பிடுவதாகக் கொள்ளலாம்.

திருப்பாவையில் இடம்பெற்றுள்ள

**'பூவைப் பூவண்ணா உன் கோயில் நின்றும் இங்ஙனே போந்தருளிக்'**

– என்ற பாடல் வரிகளும் கவனங்கொள்ளத்தக்கது.

இங்கு சீரிய சிங்கம் பூவைப் பூவண்ணா என மாறுகின்றது. ஆசிரியரின் மெல்லியல்பு, நேர்மனப் பாங்கு, மென்திறன்கள், மனிதாபிமானம், தம்மைத் தேடி நாடி வரும் சின்னஞ்சிறிய குழந்தைகளுக்கு தாயினும் நல்ல தலைவனாகக் காட்சியளித்தல் பூவைப் பூவண்ணனாக மாறுவது இயற்கையே. அப்போது தான் பாடசாலையில் ஓர் அந்நியமற்ற, மகிழ்ச்சியான கற்றற் சூழலை ஏற்படுத்த முடியும். அப்போதுதான் மிருதுதிறன்கள் மிளிர முடியும். மாணவர்களின் பேரார் வத்தைக் கற்றலின்பால் ஓர் ஆசிரியரால் தொடர்ந்தும் வெற்றிகரமாகத் தக்கவைக்க முடியும். கற்றலில் பேரார்வத்தை ஓர் மாணவனிடத்தே ஓர் ஆசிரியரால் தக்க வைக்கும் அளவில் கற்றலின் நோக்கத்தை மாணவன் எளிதாக அடைய முடியும்.

ஆயர்குலத்தவரின் வேண்டுகைகளைத் தன் கோயி லில் நின்று செவிசாய்க்காது சீரிய சிங்காசனத்தி லிருந்து கேட்டறிந்து தீர்ப்பதுபோல புதிதாக சுகாதார வழிமுறைகளில் ஒழுங்கமைக்கப்பட்ட பள்ளிகளுக்கு வந்து கல்விப் பசியுடன் வரும் மாணவர்களை வழிப் படுத்த வேண்டும். இதுவரை நாளும் புதிய பொறிமுறை கள், சாதனங்கள் மூலம் கல்வியூட்டிய ஆசிரியர்கள் புதிய முறையில் ஒழுங்கமைக்கப்பட்ட பொறிமுறைக் குள் பள்ளிகளில் இற்றைப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறு அங்கு பல்வேறு திசைகளில் இருந்தும், பல்வேறு சமூகக் கட்டமைப்புக்களிலிருந்தும் வருகின்ற மாணவர்களை உரிய வழிமுறையில் கையாண்டு கற்பிக்க வேண்டும்.

மழை, கொரோனா அச்சம் என்பதைத் தாண்டி பள்ளி வரும் பாலகர்களின் வேண்டுகைகளை, எமது சமூகத்தின் வேண்டுகைகளை, நாட்டின் எதிர்பார்ப்பை, சிரமேற்கொண்டு பணியாற்ற வேண்டும். புதிய சூழ லுக்கேற்ப கல்விக் கட்டமைப்புக்கள், நிறுவன அணுகு முறைகள் உத்திகள் வகுக்கப்பட வேண்டும். குறுகிய காலப்பகுதிக்குள் நீண்ட விடயதானங்களை நடை முறைப்படுத்தும் வண்ணம் இலகுவாக பாடக்குறிப் புக்கள் தயார்ப்படுத்தப்பட வேண்டும்.

**'சீரிய சிங்காசனத்திலிருந்து யாம் வந்த காரியம் ஆராய்ந்தருளேலோ ரெம்பாவாய்'**

என்பதுபோன்று பிள்ளைகள் நாடிவந்த காரியத்தை சிறந்த முறையில் ஆற்ற வேண்டும். சமயம் காட்டும் பேருண்மைகள் இயற்கையோடு ஒட்டியவை. சமூகத் தரிசனம் மிக்க வாழ்வியல் நெறிகள். அவை சிறந்த நயத்தலுக்குரியவை. அந்த நயத்தலும் நயத்தலி னால் தோன்றும் சிந்தனைகளும் செயற்பாடும் நன்னெறி யில் ஒவ்வொருவரையும் வழிநடத்துபவை. அந்த வாழ்வியல் நெறி எந்தத் துன்பத்தையும் வெற்றி கொள்ளும் வகைசார்ந்தது. அவை சமூகப் பேரச்சத் தையும் எதிர்த்து வரும் வகையின.

# வெளிநாடுகளில் இருந்துவரும் இலங்கையர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு!

## இராணுவத் தளபதி உத்தரவாதம்

கொழும்பு, ஜன.19

கொவிட் தொற்றின் காரணமாக வெளி நாடுகளில் சிக்கியிருந்த இலங்கையர் களை நாட்டுக்கு அழைத்து வரும் போது அவர்கள் முகங்கொடுத்த இரு பிரதான பிரச்சினைகளான விமானக் கட்டண அதி கரிப்பு மற்றும் ஹோட்டல்களில் தனி மைப்படுத்தப்படுபவர்களின் கட்டண அதி கரிப்பு என்பவற்றுக்கு எதிர்வரும் ஓரிரு தினங்களில் தீர்வு வழங்கப்படும் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இது தொடர்பாக ஊடகங்களுக்கு அவர் மேலும் தெளிவுபடுத்துகையில் –

இது வரையில் சுமார் 73 ஆயிரம் இலங்கையர்கள் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளார்கள். தற்போது அவர் களை அழைத்து வருவதில் முறையான திட்டமிடலொன்று பின்பற்றப்படுகிறது. எனினும் கடந்த ஒன்றரை மாத கால மாக நாட்டில் அதிகளவான தொற்றாளர் கள் இனங்காணப்படுகின்றமையால் வைத்தியசாலைகளில் நெரிசல் நிலை ஏற்பட்டது. இதனால் தனிமைப்படுத் தல் நிலையங்கள் பலவும் இடைநிலை பராமரிப்பு நிலையங்களாக மாற்றப் பட்டன.

இவற்றில் எவ்வித அறிகுறிகளும் இன்றி தொற்றுக்குள்ளானவர்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டது. இதனால் தனி மைப்படுத்தல் நிலையங்களில் தனிமைப் படுத்தப்படுவோரின் எண்ணிக்கை குறைவடைந்தது. இந்த சிக்கல் காரண மாக வெளிநாடுகளிலிருந்து அழைத்து வரப்படும் இலங்கையர்களின் எண் ணிக்கை சற்று குறைவடைந்தது. எனி னும் தற்போது அந்த நிலைமை சீராகியுள் ளது. கடந்த ஓரிரு வாரங்களாக நூற்றுக் கும் மேற்பட்ட இலங்கையர்கள் வெளி நாடுகளிலிருந்து அழைத்து வரப்பட்டுள் ளனர்.

இவ்வாறு இலங்கையர்களை அழைத்து வரும் செயற்பாடுகள் இரு வழி முறைகளில் முன்னெடுக்கப்படுகின்றன. இலங்கை அரசாங்கத்தால் ஒழுங்கு செய் யப்பட்ட விமானத்தில் வருபவர்கள் முப் படையினரால் அரச செலவில் நிர்வகிக் கப்படுகின்ற தனிமைப்படுத்தல் நிலை யங்களுக்கு அழைத்து செல்லப்படுகின் றமை ஒரு வழிமுறையாகும். மற்றையது வெவ்வேறு நாடுகளிலிருந்து வெவ்வேறு விமானங்கள் மூலம் இலங்கையர்கள் வருகை தருகின்றமையாகும். இதன் போது ஒவ்வொரு விமானங்களிலும் சுமார் 75 பேர் அழைத்து வரப்படுகிறார் கள். இவர்கள் மாத்திரமே ஹோட்டல்க ளில் தங்க வைக்கப்படுகிறார்கள்.

இதன் போது வழமையாக சுமார் 300



பயணிகளுடன் வரும் விமானத்தில் 50 பயணிகள் மாத்திரமே அழைத்து வரப் படுகின்றமையால் வழமைக்கு மாறாக அதிகளவான கட்டணம் அறவிடப்படுவ தாகக் கூறப்பட்டது. இது தொடர்பில் ஜனாதி பதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் உரிய தரப்பினரிடம் கலந்துரையாடி அவ்வாறு அதிகளவான கட்டணம் அறவிடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு பணிப்புரை விடுத்துள்ளனர். அதனைத் தொடர்ந்து இந்த விமானக் கட்டணங்கள் ஓரளவு குறைக்கப்பட்டுள்ளமையை அவதானிக்க முடிகிறது.

இதே போன்று ஹோட்டல்களில் தனி மைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படும் போது அறவிடப்படும் கட்டணம் தொடர்பிலும் வேறுபட்ட கருத்துக்கள் தெரிவிக்கப்படு கின்றன. 4 – 5 நட்சத்திர ஹோட்டல்களில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுவோருக்கு 7 ஆயிரத்து 500 ரூபா அறவிடுவதற்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது. வெளிநாடுகளி லிருந்து வருபவர்களில் சிலர் இராணு வத்தினரால் நிர்வகிக்கப்படுகின்ற தனி மைப்படுத்தல் நிலையங்களை விட தாம் தனி அறைகளில் இருப்பதை விரும்பு கின்றனர் எனக் கூறினர். அவ்வாறான வர்களே ஹோட்டல்களில் தங்க வைக் கப்படுகிறார்கள்.

எனினும் ஹோட்டல் உரிமையாளர்கள் அதிக கட்டணத்தை அறவிடுவதாக முறைப் பாடுகள் கிடைத்தமையையடுத்து ஜனாதி பதி தலைமையில் ஹோட்டல் உரிமை யாளர்களுடன் விசேட சந்திப்பொன்று கடந்த ஓரிரு தினங்களுக்கு முன்னர் நடைபெற்றது. இதன் போது அதிகளவான கட்டணத்தை அறவிட வேண்டாம் என்று கேட்டுக் கொண்டதோடு, 4 – 5 நட்சத்திர ஹோட்டல்கள் மற்றும் அதற்கு அடுத்த மட்டத்திலுள்ள ஹோட்டல்களில் அற விடப்பட வேண்டிய கட்டணங்கள் தொடர் பிலும் யோசனை முன்வைக்கப்பட்டது. அதற்கமைய எதிர்வரும் ஓரிரு தினங்க ளில் கட்டணங்கள் குறைக்கப்படும் என்று எதிர்பார்க்கின்றோம்.– என்றார்.

# பொலிஸ் விசாரணைகளில் செல்வாக்கு பாவித்தால் அறியத்தர பொலிஸ்மா அதிபர் அதிரடி உத்தரவு!

பொலிஸ்மா அதிபரின் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் என்று கூறிக்கொண்டு, பொலிஸாரின் விசாரணை நடவடிக்கைகளுக்கு அச்சுறுத்தல் மற்றும் இடையூறு விளைவிக்கும் நபர்கள் தொடர்பில் உடனே உயர் அதிகாரிகளுக்கு தெரிவிக்க வேண்டும். இவ்வாறு யாருமே பொலிஸாரின் செயற்பாடுகளுக்கு தலையீடு செலுத்தமுடியாது.

இந்நிலையில் எந்த அதிகாரியாவது இத்தகைய நபர்களின் வேண்டுகோளுக்கிணங்க செயற்படுவார்க ளானால், அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவ டிக்கைகள் எடுக்கப்படும் என்று பொலிஸ்மா அதிபர் சீ.டீ. விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார்.

பொலிஸ்மா அதிபரால், சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர்கள், பிரதி பொலிஸ்மா அதிபர்கள், பொலிஸ் கட்டளை அதிகாரிகள் மற்றும் பணிப்பாளர்கள், பிரதேசங்களுக்கு பொறுப்பான பொலிஸ் அதிகாரிகள், மாவட்டங்களுக்கு பொறுப்பான சிரேஷ்ட அரச நிறை வேற்று அதிகாரிகள், பொலிஸ் நிலைய பொறுப்பதி காரிகள் மற்றும் பொலிஸ் நிலையங்களின் பொலிஸ் பரிசோதகர்களுக்காக அனுப்பப்பட்ட கடிதத்திலே மேற் கண்டவாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்தக் கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள் ளவை வருமாறு –

பொலிஸ்மா அதிபரின் உறவினர்கள், நண்பர்கள் என்று கூறிக்கொண்டு சிலர் பொலிஸ் நிலையங்களுக் குத் தொடர்புக் கொண்டு, அங்கு இடம்பெறும் விசா ரணை நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிக் கின்றனர் எனத் தெரியவந்துள்ளது. இந்நிலையில், பொலிஸ் நிலையங்கள் மற்றும் விசேட விசாரணை பிரிவுகளில் இடம்பெறும் விசாரணை நடவடிக்கை ளுக்கு பொலிஸ் மா அதிபரின் உறவினர்கள் அல்லது நண்பர்கள் என்றுக் கூறிக்கொண்டு எவரும் தலையீடு செய்யமுடியாது.

அதனால், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் மற்றும் விசாரணை நடவடிக்கைகளுக்கு பொறுப்பான அதிகாரிகளுக்கு யாராவது, அவ்வாறு தொடர்பு கொண்டு அவர்களின் செயற்பாடுகளுக்கு அச்சுறுத்தல் விடுத் தால் அது தொடர்பில், 017 8591859 என்ற இலக்கத்தை தொடர்பு கொண்டு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.எம். கீர்த்திப்பால, 071 8592290 என்ற இலக் கத்தை தொடர்பு கொண்டு சிரேஷ்ட பொலிஸ் அத்தி யட்சகர் டப்லியூ.ஜே.என்.சேனாரத்ன மற்றும் 071 8592022 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக பிராதான பொலிஸ் பரிசோதகர் கே.என்.நாகந்தல ஆகியோரை தொடர்புக் கொண்டு தெரிவிக்க முடியும்.

இதன்போது யாராவது ஒருவர் தான் பொலிஸ்மா அதிபரின் உறவினர் என்று கூறிக்கொண்டு, ஏதாவது ஒரு சாராருக்கு சார்பாக செயற்படுமாறு வேண்டுகோள் விடுத்தால் அதற்கிணங்க செயற்பட வேண்டாம். இந்நிலையில் அனைத்து விசாரணை நடவடிக்கை களையும் பக்கச்சார்பின்றி நியாயமான முறையில் மேற்கொள்ளுங்கள்.

அவ்வாறு எந்த அதிகாரியாவது ஒரு பிரிவினருக்கு ஆதரவாக செயற்பட்டு, அதனால் மற்றைய தரப்பின ருக்குப் பாதிப்பு ஏற்பட்டிருந்தால், அது தொடர்பான பொறுப்பை அந்த அதிகாரிகளே ஏற்றுக்கொள்ள வேண்டும். இதேவேளை இந்த ஆலோசனைகளுக்கு புறம்பாக யாராவது ஓர் அதிகாரி செயற்பட்டிருந்தால், அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொழும்பிலிருந்து பயணித்த பஸ்ஸில் கொரோனாத் தொற்றாளர் கண்டறிவு!

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் பின் னது நுழைவாயிலில் கடந்த ஞாயிற்றுக் கிழமை மேற்கொள்ளப்பட்ட ரெபிட் அன்டிஜன் பரிசோதனையில் பஸ்ஸில் பய ணித்த ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது.

இதன் காரணமாக அந்த பஸ்ஸின் சாரதி, நடத்துநர் உட்பட பயணிகள் 19 பேர் வீட் டினுள் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது.

காலி மாவட்ட பிரதேச தொற்று நோய் விஞ்ஞான பிரிவின் வைத்தியர் வெனுர கேசிங்காரச்சி இந்த விடயத்தைத் தெரி வித்துள்ளார்.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலை ஊடாக கொழும்பில் இருந்து காலி நோக்கி பயணித்த பஸ்ஸில் இந்தக் கொரோனாத் தொற்றா ளர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கொரோனா தொற்றுக்குள்ளான பயணியை சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# சுஜித் அணியில் இணைந்தோர் மீண்டும்: ஐ.தே.கவுடன் சேர்வு!

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகிச் சென் றவர்களை மீள இணைத்துக்கொள்ளும் நடவடிக் கைகள் கடந்த ஞாயிற்றுக்கிழமையிலிருந்து ஆரம் பிக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய கடந்த நாடாளுமன்றத் தேர்தல் காலத்தில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்பட்ட இரத்தினபுரி மாவட்ட உள்ளூராட்சி சபை உறுப் பினர்கள் மீண்டும் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்துகொண்டனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் முன் னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சமன் ரத்னப்பிரிய தலைமையில் இரத்தினபுரியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற கூட்டத்திலேயே மேற்படி உள்ளூராட்சி சபை உறுப் பினர்கள் மீண்டும் ஐ.தே.கவுடன் சங்கமித்தனர்.

இந்தக் கூட்டத்தில் ஐக்கிய தேசி யக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத் தும் இரத்தினபுரி மாவட்ட தமிழ், முஸ்லிம், சிங்கள அமைப்பாளர் களும் கலந்துகொண்டனர்.

# முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜிதவுக்கு எதிராக மேல்நீதிமன்றில் குற்றப்பத்திரிகை!

முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன மற்றும் ஏனைய இருவருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று (திங்கட்கிழமை) குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முகத்துவாரம் மீன்பிடி துறைமுகம் தொடர்பாக 2014 ஆம் ஆண்டு விலை மனு கோரப்பட்டமை தொடர்பாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இந்தக் குற்றப்பத்தி ரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு



அரசாங்கத்தின் போது முகத்துவாரம் மீன்பிடி துறைமுகத்தைக் குத்தகைக்கு விட்டமையின் மூலம் அரசாங்கத்துக்கு இழப்பை ஏற்படுத்தினர் என குறித்த மூவர் மீதும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில், முன்னாள் அமைச் சர் ராஜித சேனாரத்ன மற்றும் ஏனைய இருவருக்கும் கொழும்பு மேல் நீதிமன் றம் 10 லட்சம் ரூபா பெறுமதியான பிணை வழங்கப்பட்டுள்ளது.

மேலும் பிரதிவாதிகளின் கைரேகை களைப் பெற்று அறிக்கை சமர்ப்பிக்கு மாறு நீதிபதி அதிகாரிகளுக்கு உத்தரவிட் டமையுடன் வழக்கை ஏப்ரல் 21 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்வதாக வும் அறிவித்துள்ளார்.

# பயங்கரவாதிகளை நினைவுகூர நாட்டில் இடமில்லை பல்கலைக்கழக மாணவர்கள் அதைப் புரியவேண்டும்!

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர 'அட்வைஸ்'



பயங்கரவாதிகளை நினைவு கூருவற்கு இந்த நாட்டில் இடமளிக்கப் போவதில்லை. அதனை யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் புரிந்து கொள்ளுதல் வேண்டும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரான ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

தமிழ் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது 'யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி இடிக்கப்பட்டு அமைதியின்மை ஏற்பட்டு மீளவும் அதனை நிர்மாணிப்பதற்காக அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. அங்குள்ள நினைவுத் தூபி விடுதலைப் புலிகளை நினைவு கூர்வதற்கானதல்ல, மாறாக யுத்தத்தில் உயிரிழந்த பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்களையே என்கிற கருத்து சொல்லப்படுகின்றது. அதனை அகற்ற வேண்டும் என்பதற்கான நியாயங்கள் என்ன?' - என்று அமைச்சரிடம் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இதற்கு பதிலளித்த அவர் -

அப்படியென்றால் வரவேற்கத்தக்க விடயம், ஆனால் அது அப்படியானதல்ல. நாங்கள் பயங்கரவாதிகளை நினைவு கூருவற்கு இந்த நாட்டில் இடமளிக்கப் போவதில்லை. அதனை அங்குள்ள மாணவர்கள் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

பயங்கரவாதிகளுக்கு நினைவுத் தூபி அமைப்பதை வெட்கமாகக் கருத வேண்டும். தங்களுடைய மக்களையே கொலை செய்தவர்களுக்கு நினைவுத் தூபி கட்டுவதையிட்டு வெட்கப்படுதல் வேண்டும்.

2001 சமாதானக் காலப் பகுதியில் வடக்கின் கடற்படைக் கட்டளைத் தளபதியாக இருந்தேன். எனக்குத் தெரியும் அவர்கள் சிறுவர்களை அவர்களது படைக்கு எப்படி அழைத்துச் சென்றனர் என்று.

அடுத்தநாள் காலையில் முகமாலையில் தாய்மார்கள் அழுது கொண்டு வன்னிக்கு செல்லும் வான்களை எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டு நிற்பார்கள். எதற்காக வென்றால் -

அதற்கு முந்திய இரவு வீடுகளுக்குள் நுழைந்து பலாத்காரமாக அழைத்துச் சென்ற பிள்ளைகள் இருக்கின்றார்களா என்று பார்க்க ஆகும்.

பாடசாலைகளில் இருந்து ஆர்ப்பாட்டங்களுக்கு மாணவர்களை எடுக்கின்ற போது அதற்கு எதிராகவுள்ள அதிபர்களை வீடுகளுக்குள்ளேயே சுட்டு சடலமாக்கினர்.

வெளிநாடுகளில் இருந்து அனுப்புகின்ற பணத்தை ஐம்பது வீதம் கப்பமாகப் பெற்றுக் கொண்டனர். மீனவர்களின் வருமானத்தில் ஐம்பது வீதத்தைக் கப்பமாகப் பெற்றனர். சில கடை முதலாளிகள் வரி செலுத்த முடியாமல் தற்கொலை செய்து கொண்டனர்.

அவ்வாறு செய்த பயங்கரவாதிகளுக்காகவா அவர்கள் நினைவுத் தூபி அமைக்கின்றனர்? அதற்காக அவர்கள் வெட்கப்பட வேண்டும்.

இரண்டு லட்சத்து தொண்ணூற்று ஐயாயிரம் மக்களை பணயக் கைதிகளாக வைத்திருந்த போது, அந்த மக்களை இருபத்து நான்கு மணிநேரத்திற்குள் வெளியே எடுத்தோம்.

அவர்கள் இராணுவத்தினரை நோக்கிச் சென்ற போது காவலரண்களுக்குள் இருந்து சுட்டுத் தள்ளினர். சின்னஞ் சிறுசுகளின் கால்களை வெட்டினர்.

இவ்வாறு செய்த புலிப் பயங்கரவாதிகளுக்காகவா நினைவுத் தூபி நிறுவ முற்படுகின்றனர்? அதற்காக அவர்கள் வெட்கப்படுதல் வேண்டும்.

அவர்கள் வேறு நினைவுத் தூபிகளை நிறுவ முடியும். அவர்கள் வெட்கப்பட்டாலோ, இல்லையோ பயங்கரவாதிகளை நினைவு கூருவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள். - என்றார்.

# இடமாற்றத்தில் பாரபட்சம் காட்டக்கூடாது எனக்கோரி யாழில் ஆசிரியர் போராட்டம்!

ஆறு வருடம் கஷ்டப் பிரதேசங்களில் சேவையாற்றிய ஆசிரியர்கள், தமக்கான இடமாற்றத்தை வழங்கக் கோரி மாபெரும் போராட்டமொன்றை யாழ்ப்பாணத்தில் நேற்று (திங்கட்கிழமை) முன்னெடுத்துள்ளனர்.

யாழ். மாவட்ட செயலகத்தின் முன்பாக நேற்று ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போராட்டம், வடமாகாண ஆளுநர் அலுவலகத்தின் முன்பாகவும் இடம்பெற்றது.

இந்தப் போராட்டத்தின்போது, ஆசிரியர் இடமாற்ற கொள்கையை வலியுறுத்தும் வகையில் பதாதைகளை ஏந்தி, ஆசிரியர்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

அதேநேரம், வட. மாகாண ஆளுநர், வட. மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், இலங்கை ஆசிரியர் சேவை சங்க தலைவர் உட்பட மத்திய கல்வி அமைச்சர் ஆகியோருக்கு மகஜர் கையளித்துள்ளனர்.

அந்த மகஜரில் கூறப்பட்டுள்ளவை வருமாறு -

ஒரு பிரதேசத்தில் அல்லது கல்லூரியில் தொடர்ச்சியாக சேவையாற்றுவதன் ஊடாக ஏற்படக்கூடிய ஒரு தலைமை ஆசிரியர் தொழிலுக்கு பாதிப்புகள் ஏற்படுவதால் பல்வேறுபட்ட பிரதேசங்கள், பல்வேறுபட்ட சமூக பொருளாதார மற்றும் கலாசார சூழல்களில் உள்ள கல்லூரிகளில் சேவைக்கான சந்தர்ப்பத்தை வழங்குவதற்கு பல்வேறு அனுபவங்களைப் பெற்றுக் கொண்டு தமது திறனை விருத்தி செய்வதற்கும் சகல ஆசிரியர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.

மேலும் தேசிய ஆசிரியர் இடமாற்ற கொள்கை சுற்றறிக்கையின் பிரகாரம் இடமாற்றங்கள் இடம்பெறுவதில்லை. ஆசிரியருடைய இடமாற்றத்தில் பாரபட்சம் காட்டப்படுகின்றது என மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை இடமாற்றம் தொடர்பாக தமக்கு உரிய தீர்வை வழங்காவிடின், தேசிய ரீதியில் இந்த போராட்டத்தை முன்னெடுக்க உள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.


# வவுனியாவில் திருமண மண்டபங்களில்

வவுனியா மாவட்டத்தில் திருமண மண்டபங்களில் திருமணங்களை நடத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், பொதுச்சந்தைகளை மீள திறப்பதற்கும் மறு அறிவித்தல் வரை தடை விதிக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அதேநேரம், மருதனார்மட கொத்தணியில் இருந்து தற்காலிக இடத்துக்கு மாற்றப்பட்ட பொதுச்சந்தைகளை திங்கட்கிழமை முதல் மீளவும் பழைய இடங்களில் நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# நக்கிள்ஸ் மலைத்தொடரில் வேட்டையாடப்படும் எருமை!



உலக பாரம்பரிய நக்கிள்ஸ் மலைத்தொடரில் எருமைகள் தொடர்ந்து படுகொலை செய்யப்பட்டு வருகின்றன என அந்தப் பகுதி மக்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிட்டவல, பத்தன மற்றும் ரிவர்ஸ்டன் பகுதியின் காடுகளில் படுகொலை செய்யப்பட்ட எருமைகளை அப்புறப்படுத்தியதாகவும், ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட கும்பல் இந்த மோசடியைத் தடையின்றி நடத்தி வருவதாகவும் அந்தப் பகுதி மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை இந்த சம்பவம் தொடர்பாக தகவல் தமக்கு கிடைத்துள்ளதாக தெரிவித்த வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் அது தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் எனவும் தெரிவித்துள்ளனர்.

# 183 இலங்கையர் நாடு திரும்பினர்!

வெளிநாடுகளில் இருந்து கடந்த 24 மணி நேரத்தில் 183 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

அவர்கள் 6 விமானங்கள் ஊடாக நாட்டை வந்தடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கமைய, சவுதி அரேபியாவில் இருந்து 75 பேரும் சிங்கப்பூரில் இருந்து 67 பேரும் கட்டாரில் இருந்து 28 பேரும் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

நாட்டைவந்தடைந்த அனைவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதுடன், தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டனர்.

அதேநேரம், இந்தக் காலப் பகுதியில் தொழில் நிமித்தம் 627 இலங்கையர்கள் 8 விமானங்களின் ஊடாக வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர்.

அவர்களில் அதிகமானவர்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்த வாரத்தில் இரண்டு நாள்கள் மட்டுமே நாடாளுமன்று கூடுகிறது!

## கொரோனா பாதுகாப்புக்களுக்காக

பாதுகாப்பு பிரச்சினைகள் காரணமாக இந்த வாரம் இரண்டு நாள்கள் மட்டுமே நாடாளுமன்றம் கூடும் என நேற்று (திங்கட்கிழமை) காலை இடம்பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் முடிவு எட்டப்பட்டுள்ளது.

அதன்படி நாடாளுமன்றம் இன்று (செவ்வாய்க்கிழமை) மற்றும் நாளை (புதன்கிழமை) காலை 10 மணி முதல் மாலை 4.30 மணி வரை நடைபெறும் என நாடாளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஒன்பது ஊழியர்களுக்கும் கொரோனா தொற்று உறுதியானமையைத் தொடர்ந்து, நாடாளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பில் முடிவெடுப்பதற்காக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் இந்தக் கூட்டம் இடம்பெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கொரோனாத் தொற்று இருக்கின்றமை கண்டறியப்பட்டமையைத் தொடர்ந்து, ஊழியர்கள் மற்றும் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் நடத்தப்பட்டன.

இதனையடுத்து, சி.சி.டி.வி. காட்சிகள் மூலம் கொரோனா வைரஸ் பாதிக்கப்பட்ட நபர்களுடன் நெருங்கிய தொடர்புகளை பேணியவர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

அந்தவகையில் அவர்களுடன் தொடர்புகளை பேணியவர்களுக்கு இந்த மாதம் 13 ஆம் திகதி 15 ஆம் திகதி நாடாளுமன்ற வளாகத்தில் பி.சி.ஆர். சோதனை கள் நடத்தப்பட்டன.

சுமார் 943 பேரிடம் எடுக்கப்பட்ட பி.சி.ஆர். சோதனைகளை அடுத்து ஐந்து நாடாளுமன்ற ஊழியர்கள் மற்றும் நான்கு பாதுகாப்புப் பணியாளர்கள் ஆகியோருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதனை அடுத்து கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுக்க அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுக்கவும், நாடாளுமன்ற நடவடிக்கைகளை மட்டுப்படுத்தவும் முடிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியா வைத்தியசாலையில் ஊழியர் இருவருக்கு தொற்று!

வவுனியா வைத்தியசாலை ஊழியர்கள் இருவருக்கு கொரோனாத் தொற்றுறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நோயாளர் ஒருவருக்கு கொரோனா தொற்று இருக்கின்றமை அண்மையில் உறுதி செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் அவர்களுடன் தொடர்புகளைப் பேணிய வைத்தியசாலை ஊழியர்களுக்கு முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலும் தொற்றிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதுடன், கந்தசாமி கோவில் வீதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவருக்கும் தொற்றுறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த எண்ணிக்கையுடன் வவுனியாவில் நேற்று முன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) 28 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமையுடன், கடந்த ஒரு வாரத்தில் மாத்திரம் 205 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikkathir

# காணிப்பிரச்சினைகளுக்கு காரணமான காணிப்பதிவுமுறையும் இடை தங்கும் மாற்றங்களும்

ந.சதாசிவ ஐயர்
(ஓய்வு பெற்ற மேலதிக பதிவாளர் நாயகம்)

வடமாகாண காணிப்பதிவகங்களின் தற்போதைய நிலை பற்றிய எனது முன்னைய கட்டுரையைப் பார்த்து பலர் பலவிதமான கேள்விகளை என்னிடம் பல வழிகளிலும் கேட்டனர். தனித்தனியாக பதில் சொல்லாமல் பொதுவாக எடுத்துக்கூறலாம் என விழைகிறேன்.

விடயத்தின் விரிவு கருதி பகுதி பகுதியாக வரையலாம் என எதிர்பார்க்கிறேன். அதன் முதற் பகுதியாக இக்கட்டுரையை சட்டங்கள், பிரிவுகள் என ஆராய்ச்சிக் கட்டுரையாக இல்லாமல் யாவரும் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் இலகுவாக பொதுவாக வரைகிறேன்.




காணிப் பிரச்சினைகள் அதிகமாக இருப்பதற்கும் நீதிமன்றங்களில் காணி வழக்குகள் குவிந்திருப்பதற்கும் அவை நீண்டகாலம் எடுப்பதற்கும் பிரதான காரணம் எமது காணிப்பதிவு முறை மற்றும் உறுதி எழுதும் முறை என்பவற்றில் உள்ள குறைபாடு எனக் கருதலாம்.

இலங்கையில் காணி அமைச்சு உள்ளது. அதன்கீழ் அரச காணி தொடர்பான அதிகாரங்களுள்ள பல திணைக்களங்கள் உள்ளன. இருந்தும் அரச காணிகள் தொடர்பான பிரச்சினைகளும் தீர்ந்தபாடில்லை. ஆனால் தனியார் காணி தொடர்பாக முடிவெடுக்கும் அல்லது பொறுப்பு நிற்கும் அல்லது வகை கூறும் அமைச்சோ திணைக்களமோ ஏதுமில்லை. உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் கீழ் பதிவாளர் நாயகம் திணைக்களமே அரச, தனியார் காணி தொடர்பான ஆவணப்பதிவுகளை (காணிப்பதிவுகளை அல்ல) மேற்கொள்கிறது.

உறுதிகளை பதிவு செய்வதும், இணைப்பிரதிகளை பெற்று கோவையிடுவதும், சட்டப்படி அனுமதிக்கப்பட்டவர் பார்வையிட அனுமதிப்பதும் பிரதி வழங்குவதும் ஆகியன மட்டுமே காணிப்பதிவகங்களால் ஆற்றப்படும் பிரதான கடமைகளாக உள்ளன.

உறுதியொன்று எழுதுவதாலோ, காணிப்பதிவகத்தில் பதிவதாலோ, அது தொடர்பான பிரச்சினை ஒன்று வரும்போது எழுதியவராலோ பதிந்தவராலோ அதனை தீர்த்துவைக்கும் முறையேதும் வகுக்கப்பட்டிருக்கவில்லை.

ஆகவே காணியொன்று தொடர்பில் பிரச்சினையொன்று வரும்போது அதனை தமக்குள் சமாதானமாக தீர்த்துக்கொள்ள முடியாதபோது நீதிமன்றை நாடவேண்டி ஏற்படுவதுடன் அதனை ஆராய்து முடிவு செய்வதும் நீதிமன்றாகவே உள்ளது.

தற்போது நீதிமன்று நாடுவதைக் குறைக்கும் நோக்கில் பிரதேச, மாவட்ட, மாகாண மட்டத்தில் சமாதான சபைகள் அமைக்கப்பட்டு அவை இணக்கப்பாடுகளை ஏற்படுத்துவதில் அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. காணி அல்லது நிலம் தொடர்பில் இருக்கும் உரித்தை உறுதிப்படுத்த சாசனம் எழுதும் முறை அரசர்காலம் முதல் இருந்து வந்ததொன் றாகும். கல்லில் பொறித்தல், செப்பேட்டில் பதித்தல், ஓலைச்சுவடி, காகிதத்தில் எழுதுதல் எனக் காலத்தின் நவீனத்துவத்திற்கேற்ப அது வளர்ந்தது.

அதேபோல் அதனை உறுதிப்படுத்தும் அதிகாரமும் அரசரில் தொடங்கி இன்று நொத்தாரிஸில் வந்து நிற்கிறது.

இலங்கையில் இறுதியாக ஆட்சியிலிருந்த ஆங்கிலேயரால் தமது நாட்டு முறைப்படி விவாக, பிறப்பு, இறப்பு பதிவு தொடர்பான சிவில் பதிவு மற்றும் காணிப்பதிவு பகுதிகளை உள்ளடக்கியதாக பதிவாளர் நாயகம் திணைக்களம் 1864 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. காணிப்பதிவுக்காக காணிப்பதிவகங்கள் மாவட்டங்கள் தோறும் ஆரம்பிக்கப்பட்டன. காலகதியில் தேவைக்கேற்ப அதிகரிக்கப்பட்டு தற்போது நாட்டில் நாற்பத்தைந்து காணிப்பதிவகங்கள் உள்ளன. காணிப்பதிவு, காணிப் பதிவகம், காணிப்பதிவாளர் என்ற பதங்கள் பிரயோகிக்கப்பட்டாலும் உண்மையில் காணிகளை பதிவு செய்யும் முறை ஆரம்பிக்கப்படவில்லை. ஆவணங்களைப் பதிவு செய்யும் ஆவணப்பதிவுக் கட்டளைச்சட்டமே (Registration of Documents Ordinance) உருவாக்கப்பட்டது. உறுதிகள் எழுதுவது தொடர்பில் நொத்தாரிஸ் கட்டளைச் சட்டம் உருவானது. அதற்கமைய ஆவணங்களே பதிவு செய்யப்பட்டன. காணிப்பதிவக அதிகார எல்லையுள் பதிவுப்பிரிவுகள் உருவாக்கப்பட்டு அதற்கமைய சமர்ப்பிக்கப்படும் உறுதிகள் பதியப்பட்டன. உறுதிகள் பதியப்பட்டனவே தவிர, அப்படியொரு காணியுள்ளதா, அமைவிடம், அளவு, எல்லைகள், உரித்து என்பன சரியானவையா என்பன பற்றி அக்கறை கொள்ளப்படவில்லை. உறுதியானது நொத்தாரிஸ் கட்டளைச்சட்டத்திற்கமைய தயாரிக்கப்பட்டு நொத்தாரிஸால் அத்தாடசிப்படுத்தப்பட்டு(நொத்தாரிஸின் பொறுப்பு எத்தகையது என்பதை உறுதியின் அத்தாட்சிப்படுத்தல் பகுதியைப் பார்த்தால் புரிந்துகொள்ள முடியும்) உரிய முத்திரைக்கட்டணம் செலுத்தப்பட்டிருத்தல் பதிவுக்கு போதுமானதாகும். எழுதப்படும் உறுதிகள் பதியப்படத்தான் வேண்டும் என அறுதியிட்டுக் கூறப்பட்டிருக்கவில்லை. உறுதியொன்று பொதுவாக பிரசித்த நொத்தாரிஸ் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்படுமிடத்து, அவ்வுறுதியானது முறைப்படி இலக்கமிட்டு முழுமையானதாக எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்டு, உரிய முத்திரைக்கட்டணம் செலுத்தப்பட்டிருந்தால், காணி அமைந்த இடத்துக்கு பொறுப்பான காணிப்பதிவாளர் அதனை ஏற்று, உறுதியில் தரப்பட்ட விவரங்களுக்கேற்ப அதனைப் பதிவு செய்வார். இது தவிர, சமர்ப்பிக்கப்பட்ட உறுதியின் விவரங்கள் சரியானவையா, உண்மையனவையா, கொடுப்பவர் உரித்தாளர்தானா, வாங்குபவர் யார், காணியின் உரிமைப் பணக்கொடுப்பனவு சரியாக நடைபெற்றுள்ளதா என்ற எது பற்றியும் பரிசீலிக்கும் கடப்பாடு காணிப்பதிவாளருக்கு சட்டத்தால் விதிக்கப்பட்டிருக்கவில்லை. கடந்த 150 வருடங்களுக்கு மேலாக இந்த நடைமுறையே இருந்துவருகிறது. காணிப் பதிவுக் கட்டளைச் சட்டமும் அவ்வப்போது தேவைக்கேற்ப சிறு திருத்தங்கள் செய்யப்பட்டதேயன்றி திருத்தியமைக்கப்படவில்லை.

தற்போதைய பதிவுமுறையும் காலத்தால் சிறு சிறு தவறான மாற்றங்களையும் சந்தித்துள்ளது. 1800 களின் பிற்பகுதியில் இது பற்றி ஆராய்து சரியான காணிப் பதிவு முறை கொண்டுவர முயற்சிக்கப்பட்டபோதும் ஆக்கபூர்வமாக ஏதும் நடைபெறவில்லை.

1900 இன் இரண்டாம் காலாண்டில் மீள முயற்சிக்கப்பட்டு காணிகளை அடையாளம் காணக்கூடியதாக வரைபடத்துடன் கூடிய புதிய பதிவுமுறையொன்று பரீட்சார்த்தமாக கொழும்பில் தெகிவளை, வெள்ளவத்தை, கிரிலப்பனை ஆகிய (அப்போது குடிமனைகள் குறைவாயிருந்த பிரதேசங்கள்) பிரிவுகளில் செயற்படுத்தப்பட்டது. எனினும் அது வெற்றியளிக்கவில்லை. எனினும் அப்பிரிவுகளில் தற்போதும் அப்பதிவுமுறை நடைமுறையில் உள்ளது.

பின்னர் மிகுந்த பிரயாசத்தின் காரணமாக 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்கக் காணி உரித்துச் சட்டம் உருவாக்கப்பட்டது. இச்சட்டத்தின்படியான செயற்பாடானது நில அளவைத்திணைக்களம், காணி நிர்ணயத் திணைக்களம், பதிவாளர் நாயகம் திணைக்களம் என மூன்று திணைக்களங்கள் சம்பந்தப்பட்டதாகும்.

அதற்கமைய, பிரகடனப்படுத்தப்பட்ட ஒரு பிரதேசத்தின் ஒவ்வொரு காணித்துண்டும் - வீதி, வாய்க்கால், குளம், குட்டை உட்பட யாவும் - அடங்கலாக நில அளவைத் திணைக்களத்தால் அளக்கப்பட்டு அடையாளப்படுத்தப்பட்டு இலக்கமிடப்படும். இரண்டாவதாக காணி நிர்ணயத் திணைக்களத்தால் ஒவ்வொரு இலக்கத்துக்குமுரிய காணிக்குரியவர் இனங்காணப்பட்டு, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு, உரித்து உறுதிப்படுத்தி, வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு அதுபற்றி உரித்துப்பதிவாளருக்கு(பதிவாளர் நாயக திணைக்களத்தின் காணிப்பதிவகத்திலேயே உரித்துப்பதிவகமும் அமைந்திருக்கும். காணிப்பதிவாளரே உரித்துப்பதிவாளராகவும் கடமையாற்றுவார்) அறிவிக்கப்படும்.

மூன்றவதாக உரித்துப்பதிவாளர் உரித்துப் பதிவுச்சட்டத்துக்கமைய உரித்துச்சான்றிதழை தயாரித்து காணிக்குரியவரை அழைத்து உறுதிகளுக்குப் பதிலாக உரியவருக்கு வழங்குவார். இது தொடர்பான செயற்பாடுகள் யாவும் கணினிமயப்படுத்தப்பட்டதாகவும் இருக்கும். இச்சான்றிதழ் காணியை இலகுவாக அடையாளங் காணக்கூடியதாக இலக்கம், வரைபடம், சரியானதும் உண்மையானதுமான உரித்தாளரின் விவரம், பதிவு தொடர்பான விவரங்கள் யாவும் கொண்டதாக இருப்பதோடு, எத்தேவையின் பொருட்டும் மேலதிக தேடல்களின்றி ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவும் இருக்கும்.

எனினும் காணியின் உரித்தின் உறுதியான தன்மையின் அடிப்படையில் சான்றிதழ்கள் முதலாம் தரம், இரண்டாம் தரம், சொரியல் பங்கான காணியெனின் மூன்றாம் தரம் எனத் தரப்படுத்தப்பட்டிருக்கும். காணியின் வகை கூறும் பொறுப்பு, பாதிக்கப்படுபவருக்கு நஷ்டஈடு என நன்மையான பல அம்சங்கள் இதிலுண்டு.

எனினும், இந்நடவடிக்கையானது நாற்பத்தியைந்து காணிப்பதிவகங்களில் தற்போது இருபத்தியைந்து காணிப்பதிவகங்களில் பகுதி பகுதியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றபோதும், மூன்று திணைக்களங்கள் சம்பந்தப்பட்டதாகவும் பெருஞ்செலவிலான சிரமமான நடைமுறை என்பதாலும், மக்களின் அக்கறையீனத்தினாலும், ஆமைவேகத்தில் நகர்ந்துகாண்டிருப்பதுடன் எல்லாப் பக்கத்திலும் ஆர்வமும் அக்கறையுமற்ற அறியாப்பொருளாக மாறிவருகிறது.

இது இவ்வாறிருக்க, உரித்துப்பதிவுக்கு உதவுமுகமாகவும் காணிப்பதிவு நடவடிக்கைகளை விரைவுபடுத்தும் கணினிமயப்படுத்தும் நடவடிக்கைகள் ஈ லான்ட் (E - Land) எனும் புதிய நடைமுறை பரீட்சார்த்தமாக 2012 ஆம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்டது.

ஆவணப்பதிவுக் கட்டளைச் சட்டத்துக்கு அமைய தற்போதய பதிவுமுறையை மேற்கொள்ளும் அதேவேளை அற்குச் சமாந்தரமாக அதே பதிவுகளை கணினியிலும் மேற்கொள்ளும் நடவடிக்கை யாழ்ப்பாணம், மன்னார் உட்பட இலங்கையின் ஆறு காணிப்பதிவகங்களில் பாவனையிலிருந்த காணிப்பதிவேடுகள் யாவும் ஸ்கான் செய்யப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது. எனினும் பல பல காரணங்களால் அதுவும் தேய்வடைந்தது.

ஸ்கான் செய்யப்பட்ட காணிப்பதிவேடுகளை பிரசித்த நொத்தாரிஸ் ஒருவர் உரிய அனுமதிபெற்று தனது அலுவலகத்திலிருந்தே ஒன்லைன் மூலம் பார்வையிடக்கூடியதாகவும் பிரதியை ஒன் லைன் மூலமாக பெறக்கூடியதாக ஆவன செய்ய முயற்சிக்கப்பட்டது. ஆரம்பக் கட்டமாக 2019 இல் கொழும்பு காணிப்பதிவக ஏடுகளை ஒன்லைன் மூலம் பார்வையிடும் முறையும் பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. .

இப்போது மீண்டும் அக்கறை காட்டப்பட்டு, புத்துயிரளிக்கப்பட்டு, மேலும் நவீனமயப்படுத்தப்பட்டு, கொழும்பு மற்றும் ஹோமாகம காணிப் பதிவகங்களில் இதற்கான பரீட்சார்த்த நடவடிக்கை தற்போதய பதிவு நடைமுறைகளுக்கு மேலதிகமாக முறையான நவீன இயந்திர வசதிகளுடன் கடந்த வாரம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

காலகெதியில் இதன்மூலம் உறுதியொன்றை ஒரு புறத்தால் பதிவுக்காக கொடுத்து சில நிமிடங்களில் மறுபுறத்தால் பதிவு செய்து பெறுவதோடு பதிவின் பிரதியொன்றையும் உடனடியாகவே பெற்றுக்கொள்ளக்கூடியதாகவும் இருக்கும். இணைய வழி செயற்பாடுகள் அதிகரிக்கும்.

இது ஒரு மிகச் சிரமமான, பாரிய வேலைத்திட்டமாவதுடன் மிகுந்த பொருள்செலவுடன் கூடியதுமாகும். இது வெற்றியளிக்கவேண்டுமாயின் போதிய நிதிவசதியும் பதிவாளர்களின் அர்ப்பணிப்புடனான சேவையும் வேண்டும். இம்முறையானது வெற்றியளித்து சகல காணிப்பதிவகங்களிலும் மேற்கொள்ளப்படின் உரித்துச் சான்று வழங்கும் நடைமுறையை விரைவாக்கவும் இலகுபடுத்தவும் கூடியதாக இருக்கும் எனவும் எதிர்பார்க்கலாம்.

இவைகள் சரியாக விரைவாக நடைமுறைப்படுத்தப்பட்டால் காணி தொடர்பான பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலாம் என்பதுடன் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டது போல காணிப்பிரச்சினைகளும் வழக்குகளும் எதிர்காலத்தில் இல்லாமல் போகும் என நிச்சயமாக நம்பலாம்.

# தனியார் துறையில் கையேந்தும் நிலையிலேயே தற்போது அரசு!

## ரணில் விக்கிரமசிங்க கிண்டல்



கொவிட் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதற்காக எமது அயல் நாடான இந்தியா உள்ளிட்ட பல நாடுகளும் மிகவும் பொறுப்புணர்வுடன் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளன.

எனினும் எமது அரசாங்கம் தடுப்பூசியை பெற்றுக் கொள்ள நிதியுதவி வழங்குமாறு கோரி தனியார் துறையினரிடம் கையேந்திக் கொண்டிருக்கிறது என்று ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்களுக்கு தேசிய நிதியில் தடுப்பூசியைப் பெற்றுக் கொடுப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும். எவ்வாறான அரசியல் கொள்கைகளைக் கொண்டிருந்தாலும் இந்த விடயத்தில் அரசாங்கத்துக்கு முழுமையான உதவிகளை வழங்குவதற்கு தயாராகவுள்ளதாகவும் , அரசாங்கமும் நாடாளுமன்றமும் துரிதமாக செயற்பட வேண்டும் என்றும் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

மிரிஹான பிரதேசத்தில் கடந்த சனிக்கிழமை இளைஞர்களுடன் நடைபெற்ற விசேட சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

கொவிட் தடுப்பூசிக்கான கேள்வி அதிகம் என்பதால் ஆரம்பகட்டமாக நூற்றுக்கு 3 வீதமே வழங்கப்படவுள்ளது. அதற்கமைய சுகாதார தரப்பினருக்கு மாத்திரமே வழங்கப்படும்.

இலங்கை அதனைப் பெற்றுக் கொள்வதற்கான முன்னேற்பாடுகள் எதனையும் இதுவரையில் முன்னெடுக்கவில்லை. ஏனைய நாடுகளில் இதற்காக செலவீனத்தை வரவு – செலவுத் திட்டத்தினூடாகப் பெற்றுக்கொள்ளத் திட்டமிட்டுள்ளன.

கொவிட் தொடர்பான தேசிய குழுவொன்று அமைக்கப்பட வேண்டியது அவசியமாகும். அதன் பிரதானியாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் போன்ற உயர்மட்ட சுகாதார அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும்.

ஆனால் இலங்கையில் அவ்வாறானதொரு குழுவும் இதுவரையில் அமைக்கப்படவில்லை. கொவிட் தடுப்பூசியை பெற்றுக் கொள்வதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு அமைய ஒரு தடுப்பூசிக்காக 1.60 டொலர் வழங்கப்பட வேண்டியுள்ளது.

இவ்வாறான விடயங்களுக்கான முன்னேற்பாடுகளை உள்ளடக்கி இந்தியா புத்தகமொன்றைத் தயாரித்துள்ளது. அதில் தடுப்பூசி நிலைமொன்று எவ்வாறு இயங்க வேண்டும் என்பது உள்ளிட்ட சகல விடயங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஆனால் நாம் ஒரு வேலைத்திட்டத்தையும் முன்னெடுக்கவில்லை.

இது தொடர்பில் உண்மை நிலையை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும். தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள செலவிற்கான நிதி எந்த வகையில் ஒதுக்கப்படவுள்ளது என்பதையும் அரசாங்கம் தெரிவிக்க வேண்டும்.

ஏற்றுமதி வர்த்தகர்களிடம் சென்று தடுப்பூசியை பெறுவதற்கு ஒரு கோடி டொலர் நன்கொடை வழங்குமாறு அரசாங்கம் கோரவுள்ளதாக எமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன.

தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளுதல் எமது பிரதான கடமையாகும். இது வாழ்வதற்கு இருக்கின்ற ஒரே வழியாகும். சுதந்திரமான சுகாதாரத்துறையைக் கொண்டுள்ள அரசாங்கத்துக்கு எமது நிதியில் இதனை பெற்றுக்கொள்ள வேண்டிய பொறுப்பு இருக்கிறது.

அந்த நிதியை வரவு – செலவுத் திட்டத்தினூடாகப் பெற்றுக்கொள்ள முடியும். பாரியளவான நிதி அல்ல. மாறாக அதற்கு முதற்கட்டமாக 200 கோடி டொலர் ஒதுக்குவது போதுமானது. இவை எதனையும் செய்யாது நிதி வழங்குமாறு தனியார் துறையிடம் கையேந்திக் கொண்டிருக்கின்றோம்.

எதிர்கால சந்ததியினருக்காகப் பணத்தை செலவிடுவதற்கு இந்த அரசாங்கம் தயாராக இல்லை. நிதியை சேகரிப்பதில் சிக்கல் இல்லை. ஆனால் அந்த நிதியை கொவிட் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மேலதிக சிகிச்சைகளை வழங்குவதற்காகவும், மருத்துவ உபகரணங்களைப் பெற்றுக் கொள்வதற்காகவும் பயன்படுத்தலாம். கடந்த ஆண்டு மார்ச் மாதம் இலங்கையில் கொவிட் பரவல் ஆரம்பித்தது.

ஆனால் இதுவரையில் செயற்கை சுவாச கருவிகள் மேலதிகமாகக் கொள்வனவு செய்யப்படவில்லை. ஆரம்பத்தில் சீனாவிலிருந்து நன்கொடையாக அவை கிடைத்தன. ஆனால் தற்போது அம்புலன்ஸ்களிலுள்ளவை கூட அகற்றப்பட்டுள்ளன. இவ்வாறான தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள அந்த நிதியைப் பயன்படுத்தியிருக்கலாம்.

எவ்வாறிருப்பினும் அரசாங்கத்துக்குப் பிரதான பொறுப்பு காணப்படுகிறது. நாட்டு மக்களுக்குக் கொவிட் தடுப்பிற்கான தடுப்பூசி மற்றும் மருந்துகள் என்பவற்றைப் பெற்றுக் கொடுத்தல் என்பவை அந்த பொறுப்பாகும்.

எனினும் இந்த செயற்பாடு தோல்வியடைந்துள்ளது. எனவே துரிதமாக செயற்படுமாறு அரசாங்கத்தையும் நாடாளுமன்றத்தையும் வலியுறுத்துகின்றோம். இதற்குத் தேவையான உதவிகளைச் செய்வதற்கு நாம் தயாராகவுள்ளோம். இங்கு ஆட்சி மாற்றம் என்பது அநாவசியமானது.

தற்போது எமக்குக் காணப்படுகின்ற பிரதான சவாலானது வாழ்வதற்கான போராட்டமாகும். சுகாதாரப் பாதுகாப்பும் அத்தியாவசியமானது. மாறாக ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தல் உள்ளிட்டவை இங்கு தேவையற்றவை. நாடாளுமன்றத்தில் இவை தொடர்பில் வெளிப்படுத்துங்கள். உண்மைகளைத் தெளிவு படுத்துங்கள். இதற்கான செலவை அதிகரிக்க வேண்டுமெனில் எமக்குக் கூறுங்கள். அதனை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

சுகாதாரத் தரப்பினர் உள்ளிட்டவர்களின் ஆலோசனைகளைப் பெற்று நாடாளுமன்றத் தெரிவுக் குழுவைக் கூட்டி ஒவ்வொரு நாளும் என்னென்ன செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்பது தொடர்பில் ஆராயுமாறு வலியுறுத்துகின்றோம். இவ்வாறான செயற்பாடுகளைக் காலம் தாழ்த்தினால் எமக்கு தடுப்பூசிகள் கிடைப்பதும் தாமதமாகும்.

கொவிட் பரவல் இதனுடன் நிறைவடைந்துவிடும் என்று எண்ண வேண்டாம். மீண்டுமொரு முறை பரவக் கூடும். அடுத்த தமிழ் – சிங்கள புத்தாண்டின் போதும் இந்த நிலைமை மாற்றமடையாது. ஒரு வருடம் நிறைவடைந்துள்ள போதிலும் அரசாங்கம் எந்தவொரு செயற்பாடுகளையும் முன்னெடுக்கவில்லை.

தற்போது பாரிய நெருக்கடிக்கு நாடு முகங்கொடுத்துள்ளதால் எவ்வாறான அரசியல் கொள்கையைக் கொண்டிருந்தாலும் அவற்றுக்கு அப்பால் அனைவருக்கும் உதவ நாம் தயாராக இருக்கின்றோம்.

அதற்கும் இனங்கவில்லை என்றால், நாட்டு மக்கள் பாதிக்கப்படுவார்கள். இதனை மக்களை உயிரிழக்கச் செய்வதற்கான நடவடிக்கையாகக் கருதக் கூடும். எனவே, ஒவ்வொருவரிடமும் சென்று கையேந்திக்கொண்டிருக்காமல்பேதமின்றி அனைவரிடமும் ஒன்றிணைந்து செயற்படுமாறு ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் வலியுறுத்துகின்றோம். – என்றார்.

# தனிமைப்படுத்தல் மீறி விருந்துபசார நிகழ்வு!

## பங்குபற்றிய 54 பேர் கைது

தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறி விருந்துபசார நிகழ்வில் கலந்துகொண்ட குற்றச்சாட்டில் பொலன்னறுவை, மெதிரிகிரிய பகுதியில் 54 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

13 பெண்களும் 41 ஆண்களுமே இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் ஆவர்.

கைதின்போது மூன்று இளைஞர்கள் போதைப் பொருள் வைத்திருந்தனர் எனத் தெரிவித்த பொலிஸார், அவர்களுக்கு எதிராக வழக்கு ஹிங்குராங்கொட நீதிமன்றில் தாக்கல் செய்யப்படும் என்றும் கூறினர்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற கைதின் பின்னர் இவர்களுள் 38 பேர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டும் உள்ளனர். இதேவேளை முகக் கவசம் அணியத் தவறியமை மற்றும் சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றத் தவறியமைக்காக 24 மணிநேரத்தில் மேலும் 27 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். குறித்த குற்றச்சாட்டுக்காக கடந்த ஒக்ரோபர் 30 முதல் இதுவரையான காலப் பகுதியில் மொத்தம் 2 ஆயிரத்து 605 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

# கொழும்பு நகரசபை உறுப்பினர் உட்பட 10 பேருக்கு பிடியாணை!

கொழும்பு நகரசபை உறுப்பினர் குலதிஸ்ஸ கீகனகே மற்றும் 9 பேரை கைது செய்வதற்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 28 ஆம் திகதி தெமட்டகொடையிலுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான கட்டட வளாகத்தில் அமைதியின்மை ஏற்பட்டது. இந்த சம்பவம் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் மன்றில் முன்னிலையாகத் தவறிய நிலையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# கணவன் மனைவிக்கு இடையே நடந்த மோதல் மனைவியின் உறவினர் சுட்டதில் கணவர் சாவு!

வவுனியாவில் இடியன் துப்பாக்கியால் சுடப்பட்டு காயமடைந்திருந்த நபர் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று (திங்கட்கிழமை) உயிரிழந்துள்ளார்.

வவுனியா, ஓமந்தை அரசமுறிப்பு பகுதியில் கணவன் மனைவிக்கு இடையில் இடம்பெற்ற மோதலின்போது அங்கு வந்த மனைவியின் உறவினர் ஒருவரால் கணவன் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில் அவர் படுகாயமடைந்திருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பிரதேச வாசிகளால் ஓமந்தை பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. தகவலறிந்த பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்ட நபரைக் கைது செய்துள்ளமையுடன், துப்பாக்கியையும் மீட்டிருந்தனர்.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்திருந்த 29 வயதான தேவராசா ஜெயசுதன் என்பவர் வவுனியா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். எனினும் ஒரு வாரம் கழித்து அவர் மரணமடைந்துள்ளார்.

இந்தச்சம்பவம்தொடர்பானமேலதிகவிசாரணைகளை ஓமந்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தினம் ஒரு விவசாயத் தகவல்

Agriculture Information

## உயிர் வேலி

நிலத்தை சுற்றி உயிர் வேலிகள் அமைப்பது பாதுகாப்பானது மட்டுமல்ல, செலவு குறைந்ததும், நிரந்தரமானதும் கூட. இரும்பு கம்பிகள் வேலியை விட உயிர் வேலி நன்மைகள் பயப்பவை.

தற்சார்பு பொருளாதாரத்திற்கு வழிவகுக்கக் கூடியது. மேலும் உயிர் வேலி அமைக்கும் பகுதியில் உள்ள மரங்கள் நிலத்திற்குள் வரும் காற்றை தடுக்கும் தடுப்பானாகவும் அமையும்.

மண் அரிப்பு, காற்று அரிப்பை தடுக்கும் சக்தி இவைக்கு உண்டு. இதனால் நம் நிலத்தில் உள்ளே நாம் பயிரிடும் பழ மரங்கள், தென்னை, வாழை போன்றவைகளை கீழே சாய விடாமல் காற்றின் வேகத்தை குறைத்து தடுக்கும் தடுப்பாக பயன்படுகிறது. கடற்கரை ஓரங்களில் காற்றினால் மண் வாரி இறைப்பது தடுக்கப்படுகிறது.

மண் மேடு உருவாவது தடுக்கப்படுகிறது. உயிர் வேலி மரங்கள் பரம்பை முள், கிளுவை முள், கள்ளிச்செடி, நொச்சி, பனைமரம், கொடிப்பூவரசு, கொடுக்காப்புளி, இலந்தை முள், சவுக்கு, காகிதப்பூ (போகன்வில்லா), கலாக்காய் மரம், சீகைக்காய் மரம் போன்ற உயிர் வேலி மரங்கள் பல்லுயிர்களின் பெருக்கமாகவும், அதற்கு தேவையான வாழ்விடமாகவும் அமையும்.

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

காலைக்கதிர் Kalaikkathir



# மண்டைதீவில் மக்கள் போராட்டம்!

## கடற்படைக்குக் காணி சுவீகரிப்புக்கான நில அளவீட்டுப் பணிகள் இடைநிறுத்தம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம். ஜன. 18.

**இலங்கைக் கடற்படையின் வெலுசுமன படைப்பிரிவின் பிரதான முகாம் அமைக்க மண்டைதீவு கிழக்கு (ஜே - 07) கிராம உத்தியோகத்தர் பிரிவில் இன்று காணி சுவீகரிப்புக்கான நில அளவீட்டுப்பணி மேற்கொள்ளப்பட இருந்த நிலையில் அங்கு திரண்ட மக்கள், மக்கள் பிரதிநிதிகள் ஆகியோரின் போராட்டத்தால் காணி அளவீட்டுப் பணி கைவிடப்பட்டது.**

மண்டைதீவு கிழக்கில் நில அளவீட்டுப் பணிக்கு எதிராக மக்களும், மக்கள் பிரதிநிதிகளும் இன்று திங்கள் காலை திரண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர்.

இந்நிலையில், அங்கு சென்று திரும்பிய நில அளவைத் திணைக்களத்தினர் யாழ்.மாவட்ட பொலிஸ் உயர் அதிகாரி உட்பட்ட பொலிஸாரின் துணையுடன் மீண்டும் காணி அளப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டனர். இதையடுத்து மக்கள் வீதியில் அமர்ந்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வேலணை பிரதேச செயலர் சோதிநாதன் அங்கு சென்று மக்களைச் சமாதானப்படுத்த முயன்ற போதிலும் மக்கள் அதற்கு உடன்படவில்லை.

இந்நிலையில் காணி அளவீடு நடவடிக்கையைத் தற்காலிகமாக இடைநிறுத்துவதாக அறிவித்த பிரதேச செயலர், காணி அமைச்சின் செயலாளருடன் இது தொடர்பில் கலந்துரையாடி அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து தீர்மானிப்பதாகத் தெரிவித்தார்.

இதையடுத்து நில அளவைத் திணைக்களத்தினரும் பொலிஸாரும் அங்கிருந்து திரும்பினர்.

இன்று நடைபெற்ற எதிர்ப்புப் போராட்டத்தில் மக்களுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகளுடன் ஈ.பி.டி.பி. கட்சியின் பிரதிநிதிகளும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கல்வி அமைச்சர் பீரிஸ் தனது குடும்பத்தாருடன் சுயதனிமை

கொழும்பு.ஜன. 18

கல்வி அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

கல்வி அமைச்சர் தனது குடும்பத்தாருடன் சுயதனிமையில் உள்ளார் அவரே தெரிவித்துள்ளார்.

இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்தவுடன் நெருங்கிப் பழகியமையை அடுத்தே, கல்வி அமைச்சர் சுயதனிமையில் இருக்க தீர்மானித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பியல் நிஷாந்தவுக்குக் கொரோனாத் தொற்று இன்று உறுதிப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச விசாரணை கோரி இணைய வழி கையெழுத்து

ஈழத் தமிழர்களுக்கு நீதி கிடைப்பதை உறுதி செய்யும் பொருட்டு இலங்கையைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்துமாறு ஐக்கிய நாடுகள் சபை மற்றும் அதன் உறுப்பு நாடுகளை வலியுறுத்தும் வகையில் புலம்பெயர் தமிழ் இளையோர் சார்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இணையவழி கோரிக்கை மனுவில் இன்று வரை 30 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கையெழுத்திட்டுள்ளனர்.

ஈழத்தமிழர்களுக்கான நீதி (Justice for Eelam) என்ற தலைப்பில் https://www.justiceforeelam.org இணையத்தளம் ஊடாக இந்தக் கையெழுத்து இயக்கம் கடந்த ஒரு வாரத்துக்கு முன் ஆரம்பிக்கப்பட்டது.

தமிழினப் படுகொலைகள் குறித்து சர்வதேசத்தின் மத்தியில் ஒருமித்த கருத்தொன்றை உருவாக்குவதும் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் முன்னிறுத்தி சுயாதீனமான விசாரணைக்கு வலியுறுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு இந்தக் கையெழுத்து இயக்கம் நடத்தப்படுகின்றது.

இனப்படுகொலை அல்லது பிற துஷ்பிரயோகங்களுக்கு காரணமானவர்களைக் கடுமையாகத் தண்டிப்பதன் மூலம் மீண்டும் ஒரு இனப்படுகொலை நிகழாமல் தடுக்கும் பொறிமுறையை நிறுவ விரைவாகச் செயற்படுமாறும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை மற்றும் உறுப்பு நாடுகளிடம் இந்த மனு ஊடாகக் கோரப்பட்டுள்ளது.

போர் நிறைவுக்கு வந்து 12 ஆண்டுகள் ஆகின்றபோதும் இலங்கைப் படையினர் இழைத்த குற்றங்களுக்கு பொறுப்புக் கூறவில்லை எனவும் மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையில் நடைபெறும் எந்தவொரு உள்ளக விசாரணையும் குற்றமிழைத்தவர்களைக் காப்பாற்றுவதாகவே அமையும். குற்றவாளிகளே தாங்கள் குற்றமற்றவர்கள் எனத் தீர்ப்பளிக்கும் நிலையே உருவாகும் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாங்கள் எங்களுக்கிடையில் உள்ள வேறுபாடுகளை ஒதுக்கி வைத்துவிட்டு ஒன்றிணைய வேண்டிய நேரம் இது. இந்தப் பிரசாரம் ஈழத்துக்கு நீதிக்காக தமிழ் இளையோர் ஆரம்பித்துள்ள பயணத்தின் ஆரம்பம் மட்டுமே என்று பிரசார அமைப்பாளர்களில் ஒருவரான அபிராமி லோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

# கொழும்பு மாவட்டத்தில் மீண்டும் கொரோனா தொற்று அதிகரிப்பு

கொழும்பு . ஜன. 18

கொழும்பு மாவட்டத்தில் நேற்று 241 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

இதன்படி, கொழும்பு மாவட்டத்தில் அதிக அச்சுறுத்தல் மிக்க பகுதியாக மட்டக்குளி நேற்று பதிவாகியுள்ளது. மட்டக்குளி பகுதியில் 51 தொற்றாளர்கள் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மட்டக்குளிக்கு அடுத்தபடியாக கிராண்ட்பாஸ் பகுதியில் 27 தொற்றாளர்களும், மருதானைப் பகுதியில் 22 தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.


புளுமென்டல் பகுதியில் 10 தொற்றாளர்களும், தெமட்டகொட பகுதியில் 9 தொற்றாளர்களும் பதிவாகியுள்ளனர்.

இதேவேளை, கம்பஹா மாவட்டத்தில் நேற்று 210 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கம்பஹா மாவட்டத்தில் நீர்கொழும்பு மற்றும் கம்பஹா ஆகிய பகுதிகள் அச்சுறுத்தலான பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

நீர்கொழும்பு பகுதியில் நேற்று 40 தொற்றாளர்களும், கம்பஹா பகுதியில் 32 தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

# மஹிந்த தனிமைப்படுத்தலிலா? வெளியானது உண்மை தகவல்



பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷவுக்கு கொரோனா ஏற்பட்டதாகவோ அல்லது அவர் தனிமைப்படுத்தப்பட்டிருப்பதாகவோ வெளியாகிய செய்திகளில் உண்மையில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

லங்காதீப வார இறுதி பத்திரிகையில் பிரதமர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார் என்று செய்தி வெளியாகியிருந்தது. எனினும், அதே பத்திரிகை இன்று அந்தச் செய்தியை திருத்தி பிரசுரித்துள்ளது. அதற்கமைய பிரதமர் தனிமைப்படுத்தப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# போதைப்பொருள் கடத்தலுக்கு உதவிய பொலிஸ் பரிசோதகர் வசமாக சிக்கினார்

அநுராதபுரம். ஜன. 18

போதைப்பொருள் கடத்தலுக்கு உதவிய குற்றச்சாட்டில் குற்றப்புலனாய்வுப் பிரிவின் பொலிஸ் பரிசோதகர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

அநுராதபுரம் குற்றப் புலனாய்வுப் பிரிவின் 43 வயதுடைய அதிகாரி ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவரிடமிருந்து சந்தேகத்துக்கிடமான 5 கைத்தொலைபேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்ட குறித்த நபரை 7 நாட்கள் தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்க நீதிமன்றத்தின் உத்தரவைப் பெற்றுக் கொள்ளவுள்ளதாகப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண மேலும் கூறினார்.

# மன்னார் மடு கல்வி வலயத்தில் 61 பேருக்கு ஆசிரிய நியமனம்!



*யாழ்ப்பாணம். ஜன. 18*

*மடு கல்வி வலயத்தில் 61 பேருக்கு ஆசிரியர்நியமனம் நேற்று(திங்கட்கிழமை) வழங்கி வைக்கப்பட்டது.*

*மடு வலயக் கல்வி அலுவலகத்தில் தேசிய கல்வியியல் கல்லூரியில் டிப்ளோமா கற்கை நெறியைப் பூர்த்தி செய்த 61 ஆசிரியர்களுக்கே இவ்வாறு நியமனம் வழங்கி வைக்கப்பட்டது.*

*குறித்த நியமனம் வழங்கும் நிகழ்வு மடு வலயக் கல்வி பணிப்பாளர் க. சத்தியபாலன் தலைமையில் காலை 9.30 மணிக்கு மடு வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.*

*இதன்போது பிரதம விருந்தினராக வட. மாகாண கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவி செயலாளர் திருமதி அஞ்சலி சாத்தசீலன் மற்றும் வலயக் கல்வி அலுவலக அதிகாரிகள், ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.*

# இராஜாங்க அமைச்சர் நிஷாந்தவுக்கு தொற்று!

இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்தவிற்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து அவருடன் தொடர்புடைய பத்து ஊழியர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீமிற்கும் கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மன்னார் மாவட்டத்தில் இம்மாதம் இதுவரை 49 பேருக்குத் தொற்று!

## மொத்தப் பாதிப்பு 66 ஆக அதிகரிப்பு

மன்னார். ஜன. 18

மன்னார் மாவட்டத்தில் இம்மாதம் இதுவரை 49 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் மொத்தத் தொற்றாளர்களது எண்ணிக்கை 66 ஆக அதிகரித்துள்ளது.

இந்தத் தகவலை மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார்.

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இன்று மாலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

# முகக்கவசம் அணியாத மேலும் பலர் மாட்டினர்!

## இதுவரை 2,605 பேர் கைது

**தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறிச் செயற்பட்ட குற்றச்சாட்டில் மேலும் 27 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

**இன்று காலை 5 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.**

**சமூக இடைவெளியைத் தவிர்த்து செயற்பட்ட குற்றச்சாட்டில் கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 30ஆம் திகதி தொடக்கம் இதுவரையான காலப் பகுதியில் 2 ஆயிரத்து 605 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

# பருத்தித்துறையில் மேலும் இருவருக்குக் கொரோனா!

## வடக்கில் நேற்று 9 பேருக்குத் தொற்று

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம். ஜன. 19

பருத்தித்துறையில் மேலும் இருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

மேல் மாகாணத்திலிருந்து வந்த இருவருக்கே கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கம்பஹா மாவட்டம், வத்தளையிலிருந்து சொந்த வீட்டுக்கு வந்திருந்த தாயும் மகளும் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர். அவர்களிடம் பெறப்பட்டிருந்த உயிரியல் மாதிரிகள் நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோதே கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர்களுடன் சேர்த்து வடக்கு மாகாணத்தில் நேற்று ஒன்பது பேருக்குத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. யாழ். கொரோனா ஆய்வு கூடங்களில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளின்போதே 9 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

### வெளிவாரிப் பரீட்சைகள்

1. இசைமாணி / நடனமாணி - மூன்றாம் வருடத் தேர்வு - 2016 (இறுதிச் சந்தர்ப்பம்)
2. இசைமாணி / நடனமாணி - நான்காம் வருடத் தேர்வு - 2016

மேற்படி பரீட்சைகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மிக விரைவில நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப்பரீட்சைக்கு தோற்றத் தகுதியான பரீட்சார்த்திகள் மக்கள் வங்கிக் கிளையில், விண்ணப்ப கட்டணம் மற்றும் பரீட்சைக் கட்டணங்களை செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டை யாழ். பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் சமர்ப்பித்து விண்ணப்ப படிவங்களை பெற்றுக்கொள்ளலாம்.

தபால் மூலம் விண்ணப்பப்படிவத்தினைப் பெற விரும்புவோர், நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா.300/= க்கான காசுக் கட்டளை / தபால் கட்டளையை, சுய முகவரியிடப்பட்ட ரூபா.70/= பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28 செ.மீ x 20 செ.மீ அளவுடைய தபால் உறையுடன், **பிரதிப் பதிவாளர், திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி** என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவம் மற்றும் பணம் செலுத்துவதற்கான பற்றுச்சீட்டினை www.codl.jfn.ac.lk எனும் இணைய முகவரியிலும் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்படி பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்வதற்கான **இறுதித் திகதி - 05.02.2021 (வெள்ளிக்கிழமை)** ஆகும்.

பரீட்சைகள் நடைபெறும் திகதி மற்றும் விவரங்கள் பின்னர் பத்திரிகைகளிலும் மேற்படி இணையத்தள முகவரியிலும் விளம்பரப்படுத்தப்படும்.

மேற்படி பரீட்சைகள் மூன்று நாள்கள் முன்னறிவித்தலுடன் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. எனவே மாணவர்கள் பரீட்சைக்கு தயாராகுமாறு வேண்டப்படுகிறீர்கள்.

மேலதிக விபரங்களைப் பெறவிரும்புவோர் **021 - 222 - 3612** என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர்
18.01.2021



## மஞ்சள் கன்றுகள் விற்பனைக்கு!

**நல்ல தரமான இரண்டு அடி வரை வளர்ந்த ஒன்றரை மாத மஞ்சள் கன்றுகள் யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.**

**விலை - 150/=**





**கற்பகவனம் விற்பனை நிலையம்.**
**461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**
**(யாழ் முற்றம் - Yarl Muttam)**
**021 492 7778**


### ஜெனிவா அமர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பலவீனப்படுத்துவதற்காக உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகளின் ஆதரவைப் பெற முயல்கின்றனர். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் அமர்வுக்கு முன்னதாக ஒருங்கிணைந்த முயற்சிகள் இடம்பெறுகின்றன.

பயங்கரவாத மரபு சார்ந்த இராணுவ வழிமுறைகள் மூலம் ஈழத்தைப் பெறுவதற்கான தங்களின் முயற்சியில் தோல்வியடைந்தவர்கள் – நாட்டை இன அடிப்படையில் பிரிப்பதில் இன்னமும் நம்பிக்கொண்டுள்ளவர்கள் சர்வதேச தலையீட்டைக் கோருகின்றனர்.

பொறுப்புக்கூறும் விடயத்தை பயன்படுத்தி அரசியல் செய்ய வேண்டாம் என அவர்களிடம் நாம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

வேலுப்பிள்ளை பிரபாகரனைத் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதியாக ஏற்றுக்கொள்ளும்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விடுதலைப்புலிகள் கட்டாயப்படுத்தியமை அந்தக் கட்சி இப்போது மறந்துவிட்டது.

நந்திக்கடலில் விடுதலைப்புலிகளின் தலைவரின் தலையில் இராணுவம் துப்பாக்கி ரவையைச் செலுத்தும்வரை விடுதலைப்புலிகள் தாங்கள் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்பதைப் பயன்படுத்தினார்கள்.

ஜெனிவாவில் இம்முறை இலங்கை இது புதிய பிரேரணை கொண்டுவரப்படுவது நிச்சயம் என்பதால் அரசு மேலும் தாமதிக்காமல் அது குறித்து ஆராய்வது முக்கியமானது.

இங்கிலாந்தின் நேஸ்பி பிரபு தெரிவித்துள்ள விடயங்களையும, விக்கிலீக்ஸில் வெளியாகியுள்ள விடயங்களையும் இலங்கை அரசு தனக்குச் சார்பாக வாதிடுவதற்காகப் பயன்படுத்த வேண்டும்.

அதேவேளை, தமிழ்க் கட்சிகளின் கருத்துக்களையும் சாதாரணமாகக் கருதக்கூடாது.

விடுதலைப்புலிகளின் குரலாகச் செயற்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு முதல்தடவையாக இரண்டு கட்சிகளின் ஆதரவு கிடைத்துள்ளது.

2013 இல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடாக அரசியலுக்கு வந்த விக்னேஸ்வரன் அந்தக் கட்சியிலிருந்து விலகியுள்ள போதிலும் அவர் ஜெனிவா குறித்த பொது நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனும் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடனும் இணைந்து செயற்படுகின்றார்.

இம்முறை ஜெனிவா அமர்வு இலங்கைக்குப் பெரும் சவாலாகக் காணப்படப் போகின்றது. இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறலை விட மேற்குலகநாடுகளின் உண்மையான நலன்களும் நோக்கங்களும் பரந்துபட்டவை – என்றார்.

### வீறாப்பு பேசிய

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உடனே பதவி விலக வேண்டும்.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மனு நாணயக்கார தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:–

உதயங்க வீரதுங்கவால் நாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட உக்ரேன் கொத்தணி தற்போது தலாதா மாளிகையிலும் புகுந்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் போது சுமால் 260 பேர் உயிரிழந்தனர். ஆனால், தற்போது கொரோனா வைரஸ் தொற்றால் 260 இற்கும் அதிகமான தொற்றாளர்கள் உயிரிழந்துள்ளனர். இதற்கு அரசு வெட்கப்பட வேண்டும்.

இது தொடர்பில் நாம் நாடாளுமன்றத்தில் கேள்வியெழுப்பியபோது உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் உயிரிழந்ததை விட கொரோனாத் தொற்றால் மக்கள் உயிரிழக்கவில்லை என்று பதிலளித்தார்கள்.

ஆனால், தற்போது உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலால் உயிரிழந்தவர்களை விட அதிகமானோர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர். இவ்வாறான நிலைமை ஏற்பட்டுள்ள நிலையில் சுகாதார அமைச்சர் உடனே பதவி விலக வேண்டும்.

காலி போன்ற பிரதேசங்களில் இனங்காணப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கை அரசால் வெளியிடப்படும் எண்ணிக்கையிலிருந்து மாறுபடுவதை நாம் மதிப்பீட்டின் மூலம் கண்டறிந்துள்ளோம்.

அபாயம் குறைவு என்று மக்களுக்குக் காண்பிப்பதற்காக எண்ணிக்கையைக் குறைவாகக் கூறி மக்களை மேலும் அச்சுறுத்தல் மிக்க நிலைக்குத் தள்ள வேண்டாம் என்று அரசிடம் கோருகின்றோம்.

நல்லாட்சி அரசின்போது இடம்பெற்ற மத்திய வங்கி பிணைமுறி பற்றிப் பெரிதாகப் பேசப்பட்டது. ஆனால், அதனை விடவும் பாரிய மோசடி சீனி வரி குறைப்பின் மூலம் இடம்பெற்றுள்ளது.

கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள பணம் போதாது எனக் கூறுபவர்கள் டெலிகொம் நிறுவனத்தின் சின்னத்தை மாற்றுவதற்கு 2 பில்லியன் ரூபா செலவிட்டுள்ளனர். தற்போதுள்ள நிலைமையில் இது அநாவசியமானதாகும். எனவே, இவ்வாறான வீண் செலவுகளைத் தவிர்த்து தடுப்பூசி பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் – என்றார்.

### துறைசார் நிபுணர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கூட்டணி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய தரப்புக்கள் தனித்தனியாக களமிறங்குவதே தற்போதைய நிலைப்பாடாக உள்ளது.

இவ்வாறான நிலையானது, கூட்டணி ஆட்சிக்கே பெரும்பாலும் வித்திடும் என்றும் சில சமயங்களில் முத்தரப்பிடையே காணப்படும் முரண்பாட்டால், இலங்கை அரசின் பங்காளிகளாக இருக்கும் ஈ.பி.டி.பி. மற்றும் அங்கஜன் அணிக்கு கூட்டிணைந்து ஆட்சியை கைப்பற்றுவதற்கும் வழிவகுத்து விடும் ஆபத்தும் உள்ளது என்றும் உணரப்படுகின்றது.

இந்தநிலையில், கூட்டமைப்பு, முன்னணி, கூட்டணி ஆகிய மூன்று தரப்புக்களும் ஒன்றிணைந்து கட்சிசார்பான அரசியல் செயற்பாட்டாளர்களைத் தவிர்த்து துறைசார் நிபுணர்களை களமிறக்குவது தொடர்பில் முயற்சியொன்றும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த முயற்சியையும் சுமந்திரனே முன்னெடுத்திருப்பதாகவும் இதன் முதற்கட்ட கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துடன் உத்தியோகப் பற்றற்ற பேச்சுவார்த்தையொன்றை முன்னெடுத்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

எனினும் அந்தப் பேச்சு வெற்றியளித்ததா இல்லை அடுத்த கட்டத்திற்கு நகர்கின்றதா என்பது தொடர்பில் தகவல்கள் வெளிப்படாத நிலையில் விரைவில் விக்னேஸ்வரன் தரப்புடனும் அதுதொடர்பான பேச்சு முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரியவருகிறது.

– இவ்வாறு இணைய ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

### யாழ்.ரயிலில் வந்தவருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வவுனியா சூடுவெந்தபுலவு நோக்கி வந்தவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து அந்நபர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமையுடன் அவரிடம் பி.சி.ஆர். பரிசோதனையும் மேற்கொள்ள சுகாதார பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# ஜனாஸா எரிப்பு விவகாரம்: ஆறுதல் கூறினார் தேரர்!

ஜனாஸாக்களை எரித்து விட்டார்கள் என இஸ்லாமிய நண்பர்கள் கவலைப்படவே வேண்டாம். இந்நிலை தொடரப் போவதில்லை. கொடிய கொரோனா விஷ கிருமி முடிவுக்கு வந்த பிறகு ஜனாஸாவை உங்கள் மார்க்கப்படியே இந்த மண்ணில் புதைக்கலாம் என சர்வமத நல்லிணக்கத்துக்கான பிரதிநிதி மற்றும் தமிழ் மொழி அடங்கலாக பன்மொழிகளிலும் தேர்ச்சி பெற்றவர் என அழைக்கப்படும் பொஹவந்தலாவ ராகுல தேரர் தெரிவித்துள்ளார்.

மனிதன் இயற்கைக்கு செய்த தவறால் இயற்கை மனிதனுக்குக் கொடுத்த முதலாவது தண்டனை சுனாமி இரண்டாவது தண்டனை கொரோனாவிஷகிருமி ஆகும். கொடிய கொரோனா இந்த உலகத்தை விட்டு நீங்குவதற்கு எல்லா பிரார்த்தனைகளையும் செய்வோம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அம்பாறையில் அமைந்துள்ள ஊடக அமையத்தில் ஊடகவியலாளர்களை சந்தித்து கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் –

எமது நாட்டில் கடந்த 80 வருடங்களாகப் பல பிரச்சினைகள் இருந்து வருகின்றன. இவற்றுக்கெல்லாம் தீர்வுகள் காணப்படல் வேண்டும். மொழி பிரச்சினையே இவற்றுக்கெல்லாம் அடிப்படையான பிரச்சினை. பல நாடுகளில் பல மொழிகள் இருக்கின்றன. அங்கெல்லாம் பல கோடி மக்கள் வாழ்கின்றனர்.

இரு மொழிகள் காணப்படுகின்ற எமது நாட்டில் நாம் இரு மொழிகளையும் கற்றுக் கொண்டு புரிந்துணர்வோடு வாழா விட்டால் என்ன பயன்? தமிழ் இளையோர்கள் சிங்களத்தையும் சிங்கள இளையோர்கள் தமிழையும் கற்றுகொள்ள வேண்டும். ஒரு தாயின் குழந்தைகளாக வெளிநாடுகளில் உள்ள நன்மைகளையும் பெற்றுக் கொண்டவர்களாக நாம் இந்நாட்டில் வாழ முடியும்.

சமயங்களுக்கு அப்பால் நாம் அனைவரும் இலங்கையர்களாக ஒன்றுபட்டு நிற்க வேண்டும். நான் பகவத்கீதை , திருக்குர்ஆன் ஆகிய புனித நூல்களையும் படித்து இருக்கின்றேன். இறந்த பின்னர் ஜனாஸாவை எரிக்கக் கூடாது புதைக்க வேண்டும் என்று முஸ்லிம்களுக்கு அவர்களுடைய மார்க்கம் சொல்லி கொடுக்கின்றது. அதை அவர்கள் பின்பற்றுகின்றனர். இருந்தாலும் நாம் எமது சுகாதாரத்தைப் பற்றி இப்போது சிந்திக்க வேண்டிய கால கட்டத்தில் இருக்கின்றோம்.

உலக சுகாதாரமும் எமது நாட்டு சுகாதாரமும் என்ன சொல்கின்றனவோ அதன்படி வாழ வேண்டிய சூழ்நிலை நமக்கு ஏற்பட்டு இருக்கின்றது. மேலும் புதைக்கலாம் என்று சுகாதாரம் கூறினால் நாட்டிலே உயர் பதவிகளில் இருக்க கூடியவர்கள் இந்நாட்டு மக்களுக்கு சரியான முறைகளில் அதற்கான வழிகளை செய்து கொடுக்க வேண்டும்.

புதைத்தால் விஷ கிருமிகள் அதிகரிக்கும் எரித்துதான் ஆக வேண்டும் என்று உலக சுகாதாரம் கூறினால் அதை நிச்சயமாக ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். காரணம் இறந்தவர்களை பற்றி சிந்திப்பதை விட வாழ்கின்ற மற்ற மக்களைப் பற்றி யோசிக்க வேண்டிய நிலை இருக்கின்றது. அவ்வாறு யோசித்து செயற்படுகின்றபோது இஸ்லாமியர்கள் தொடர்பாக இன்னமும் கூடுதலான கௌரவத்தையும் மரியாதையையும் அது ஏற்படுத்தும்.

ஆனால் ஜனாஸாக்களை எரித்து விட்டார்கள் என்று இஸ்லாமிய நண்பர்கள் கவலைப்படவே வேண்டாம். இந்நிலை தொடரப் போவதில்லை. கொடிய கொரோனா விஷ கிருமி முடிவுக்கு வந்த பிறகு ஜனாஸாவை உங்கள் மார்க்கப்படியே இந்த மண்ணில் புதைக்கலாம்.

மனிதன் இயற்கைக்குச் செய்த தவறால் இயற்கை மனிதனுக்கு கொடுத்த முதலாவது தண்டனை சுனாமி இரண்டாவது தண்டனை கொரோனாவிஷகிருமி ஆகும். கொடிய கொரோனா இந்த உலகத்தை விட்டு நீங்குவதற்கு எல்லா பிரார்த்தனைகளையும் செய்வோம். சாந்தி, சமாதானம் ஆகியவற்றை எப்படி உருவாக்க வேண்டும்? என்று இலங்கை தாய் மண்ணில் இருந்து ஐக்கிய நாடுகள் சபைக்கு நாங்கள் சொல்லி கொடுக்க முடியுமே ஒளிய ஐக்கிய நாடுகள் சபையில் இருந்து எமது நாட்டுக்கான சாந்தியையும் சமாதானத்தையும் கொண்டு வர வேண்டிய அவசியமே கிடையாது.

அத்துடன் எனது குடும்பத்தின் பிரச்சினையை அடுத்த வீட்டுக்குக் கொண்டு செல்வதற்கு நான் தயாராக இல்லை. ஒரு குடும்பத்தின் பிரச்சினை அந்த குடும்பத்துக்கு உள்ளேயே முடித்து கொள்ளப்பட வேண்டும் என்றுதான் யோசிக்கின்றேன்.

இலங்கை என்பது என்னுடைய குடும்பம். எமது நாட்டில் உள்ளவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஐக்கிய நாடுகள் சபைக்கு நல்ல போதனைகளைக் கொடுக்க முடியும். காரணம் இலங்கை திருநாட்டில் நல்ல தர்மங்கள் நிலவுகின்றன எனக் கூற விரும்புகின்றேன் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# புலனாய்வுத்துறையும் கல்வி அமைச்சுமே நினைவுத் தூபி இடித்தழிக்கக் காரணம்!

## உண்மையைப் போட்டுடைத்தார் யாழ். பல்கலை துணைவேந்தர்

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இடித்தழிக்கப்பட்ட சம்பவத்துக்கு பின்னணியில் யார் உள்ளனர் என்ற தகவலை துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜா வெளிப்படுத்தியுள்ளார்.

இந்தியாவிலிருந்து வெளிவரும் 'ஹிந்து' பத்திரிகைக்கு அளித்த செவ்வியின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு, புலனாய்வுத்துறை மற்றும் கல்வி அமைச்சு ஆகியவற்றின் அறிவுறுத்தல்களை அடுத்தே நினைவுத்தூபியை இடித்தழிக்க தான் உத்தரவிட்டார் எனத் தெரிவித்தார்.

எனினும் பின்னர் நிலைமையை சுமுகமாக்குமாறு அதிகாரதரப்பு தன்னிடம் கேட்டுக்கொண்டதாகவும் வெளிநாடுகளில் எதிர்வினைகள் குறிப்பாக தமிழகம் கொந்தளிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

புனரமைக்கப்படவுள்ள நினைவுத்தூபி போரை விடவும் சமாதானத்தை வெளிப்படுத்தும் எனக்கூறிய துணைவேந்தர், நினைவுத்தூபியை மீள அமைப்பது தொடர்பில் ஆராய மாணவர் ஒன்றியம் உட்பட ஒரு குழுவை அமைத்துள்ளதாகவும் 'ஹிந்து' பத்திரிகையிடம் அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழ்ப்பாணத்தில் வழமைக்கு திரும்பின ரயில் சேவைகள்!

கொழும்பு, ஜன.19

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் அச்சம் காரணமாக நிறுத்தப்பட்டிருந்த ரயில் சேவைகள், நேற்று (திங்கட்கிழமை) முதல் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

அந்த வகையில் யாழ்ப்பாணத்தில் இருந்து இரண்டு ரயில்கள் நேற்று (திங்கட்கிழமை) புறப்பட்டன. முதலாவதாக காங்கேசன்துறையில் இருந்து காலை 5.30 மணிக்கு புறப்பட்டு, யாழ்ப்பாணத்தில் இருந்து காலை 6.10 மணிக்கு புறப்படுகின்ற உத்தர தேவி கடுகதி ரயிலும் காங்கேசன்துறையில் இருந்து காலை 9 மணிக்கு புறப்பட்டு, யாழ்ப்பாணத்தில் இருந்து 9.45 மணிக்கு புறப்படும் யாழ்.தேவி ரயில் சேவையும் ஆரம்பமாகி இருக்கின்றன.

அவ்வாறே கல்கிஸையில் இருந்து 5.55 மணிக்கும் 6.35 மணிக்கு கொழும்பிலிருந்தும் புறப்படும் யாழ்.தேவி ரயிலும் 11.50 மணிக்கு கொழும்பிலிருந்து புறப்படும் உத்தரதேவி ரயிலும் நேற்று சேவையை ஆரம்பித்துள்ளன.



ஏனைய புகையிரத சேவைகள் 25ஆம் திகதி தொடக்கம் முக்கியமாக கொழும்பிலிருந்து புறப்படும் குளிரூட்டப்பட்ட ரயில் மற்றும் இரவு தபால் ரயில் உள்ளிட்ட அனைத்து ரயில் சேவைகளும் படிப்படியாக ஆரம்பமாக இருக்கின்றன.

பொதுமக்கள் வழமைபோன்று ஆசனங்களை யாழ்ப்பாண ரயில் நிலையத்தில் முற்பதிவு செய்து கொள்ள முடியும்.

அத்தோடு உங்களுக்கு தேவையான ஏதாவது விவரங்களுக்கு 021-2222271 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பைமேற்கொண்டு அறிந்துகொள்ள முடியும்.

மேலும் பயணிகள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி, ரயிலில் பயணத்தை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம் என யாழ்ப்பாண ரயில் நிலையம் பிரதம அதிபர் ரி.பிரதீபன் தெரிவித்துள்ளார்.

# யாழ்ப்பாண மாவட்டத்தில் பொதுச்சந்தை மக்கள் பயன்பாட்டுக்காகவே மீளத் திறக்கப்பட்டது!

யாழ்ப்பாணத்தில் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக மூடப்பட்டிருந்த அனைத்து பொதுச் சந்தைகளும் நேற்று (திங்கட்கிழமை) மீள திறக்கப்பட்டுள்ளன.

கடந்த மாதம் யாழ்ப்பாண மாவட்டத்தில் கொரோனா அதிகரித்ததன் காரணமாக அங்குள்ள அனைத்து பொது சந்தைகளும் சுகாதார பிரிவினரால் மூடப்பட்டிருந்த நிலையில், வடக்கு மாகாண சுகாதார திணைக்களத்தின் வழிகாட்டுதலுக்கிணங்க மக்கள் பயன்பாட்டுக்காக மீளத்திறக்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்திலுள்ள திருநெல்வேலி பொதுச்சந்தை, மருதனார்மடம் பொதுச்சந்தை மற்றும் ஏனைய பொதுச்சந்தைகள் மக்கள் பயன்பாட்டுக்காக திறக்கப்பட்டுள்ளன.

மேலும் சந்தைகளில், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி சமூக இடைவெளியைப் பேணி வியாபார நடவடிக்கையை மேற்கொள்வதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்தைகளில் பொலிஸார், சுகாதாரப் பிரிவினர் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.


கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை

| மணமகன் விவரம் | மணமகள் விவரம் |
|---|---|
| பிறந்த திகதி - 1984.01.30 | பிறந்த திகதி - 1984.09.20 |
| மதம் - இந்து P | மதம் - இந்து V |
| நட்சத்திரம் - மூலம் | நட்சத்திரம் - ஆயிலியம் |
| செவ் - ------ | செவ் - 2இல் |
| பாவம் - 20 3/4 | பாவம் - ------ |
| கல்வி - பட்டதாரி | கல்வி - A/L |
| தொழில் - அரச தொழில் | தொழில் - பிரான்ஸ் PR |
| எதிர்பார்ப்பு - அரச தொழில் | எதிர்பார்ப்பு - பிரான்ஸ் போக மணமகன் தேவை |

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.

க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.

குஞ்சர் கடையடி,
பருத்தித்துறை பிரதான வீதி,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை

077 3434 415
077 8578 528



Anna EXPRESS Courier Services
அண்ணா
விரைவும் பொதிகள் சேவை

077 8889388
075 3305500
070 3305500

3-6 நாட்கள்
லண்டன் ⇨ 1000/=

15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)
எம்முடன் இணைந்து உங்களிடத்தில் பொதிகள் சேவை தொடங்குவதாயின் தொடர்புகொள்ளவும்

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | சங்கத்தானை | கனகராயன்குளம் |
| சங்கானை | பளை | மல்லாவி |
| கல்வியங்காடு | கிளிநொச்சி | மன்னார் |
| ஆவரங்கால் | புதுக்குடியிருப்பு | வவுனியா |
| நெல்லியடி | முல்லைத்தீவு | கொழும்பு |


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.01.2021 இல் வெளியிடப்பெற்றது.